

Methodist Church
Sri Lanka

காலாண்டிதழ் யூலை-செப்ரெம்பர் 2022

# தொடுவானம்

## கலை இலக்கிய சஞ்சிகை



இலங்கை மெதடிஸ்த திருச்சபை - வடக்கு கிழக்கு திருமாவட்ட அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாண்டிதழ் யூலை-செப்ரெம்பர் 2022

# தொடுவானம்

கலை இலக்கிய சஞ்சிகை

"பேசத் தெரியாதவர்கள் சார்பாக பேசு; திக்கற்றவர்கள் எல்லோருடைய உரிமைகளுக்காகவும் போராடு அவர்கள் சார்பாகப் பேசி நியாயமான தீர்ப்பை வழங்கு; எளியோருக்கு வறியோருக்கும் நீதி வழங்கு."

(நீதிமொழிகள்.31:8,9)

## இலங்கை மெதடிஸ்த திருச்சபை

வடக்கு கிழக்கு திருமாவட்ட அவை.

"தமிழ் பேசும் மெதடிஸ்தர்களின் ஒரே குரல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவஞானம் புத்துயிர் பெற்றது
- யூத நிலத்தினிலே,
சத்தியவேதம் நின்று நிலைத்தது
- தரணி மீதினிலே,
எத்தனை நன்மைகள் வந்து பிறந்தது
- இயேசு பிறந்ததினால்,
இத்தனை நாளும் மானிடர் வாழ்வது
- இயேசுவின் வார்த்தையினாலே...

— இயேசு காவியம் —


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியரிடமிருந்து... | 3 |
| 2. | இலங்கை மெதடிஸ்த திருச்சபையின்... | 5 |
| 3. | இலங்கையில் மெதடிஸ்தம் | 8 |
| 4. | சமகால சிந்தனை | 15 |
| 5. | இலங்கையில் பொருளாதார நெருக்கடி... | 21 |
| 6. | நாமும் நம் நாடும் | 31 |
| 7. | இலங்கை திருச்சபை வரலாற்றில்... | 34 |
| 8. | மலைப்பொழிவினைத் தற்காலச் சூழ்நிலையில்... | 41 |
| 9. | பாடல் பிறந்த கதை | 45 |
| 10. | அருட் திரு. J.W.யோகராஜா | 46 |
| 11. | திருமாவட்ட அவைச் செய்திகள் | 49 |
| 12. | அமரர் அருட்பணி. அரசரட்ணம் | 52 |
| 13. | தேவ ஊழியர்கள் யார்? | 55 |
| 14. | அருட் திரு. யோன். பிலிப் சண்முகம் | 57 |
| 15. | குறுக்கெழுத்து போட்டி | 59 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியரிடமிருந்து...

அன்புசால் தொடுவானம் வாசக நெஞ்சங்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறை வாழ்துக்களும் வணக்கங்களும் மக்களின் வாழ்வியலில் ஏற்பட்ட துன்பங்களும் சுமைகளும் நீதி மறுப்புக்களும் பொருளாதார நெருக்கடிகளும் வறுமையின் கோரப்பிடியும் எதுவித மாற்றமும் இன்றி தொடர்கின்றது. இந்நாட்டின் வரலாற்றில் தீமையும் அநீதியும் நிறைந்த மானிட அழிப்பு அரசுக்கு எதிராக இளையோர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் மிகப் பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் ஆள் மாற்றம் மட்டுமே சாத்தியமாகி கட்டமைப்பு முறைமை மாற்றத்தை உருவாக்கவில்லை.

இதற்கு பின்னரும் அதிகார மையம் கடந்த வரலாற்றில் இருந்து பாடத்தினை கற்றுக் கொள்ளவோ இந்நாட்டில் போராட்டங்கள் வன்முறைகள் அழிப்புக்கள் மீள நிகழாமையினை உறுதிப்படுத்துவதற்கான நீதியான செயற்பாடுகளை முன்னெடுப்பதினை விடுத்து மானிட உரிமைகள் சமாதானம் சகவாழ்வு ஜனநாயகம், சமத்துவம், அதிகாரப்பகிர்வு, பொருளாதார மீட்சி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அப்பால் ஜனநாயக மக்கள் மயமான போராட்டங்கள் இனி உருவாகாதவாறு இரும்புக் கரங்கள் கொண்டும் புதிய பெயரில் அடக்குமுறை சட்டங்களை உருவாக்கி அதன்மூலம் அடக்கி ஒடுக்கவே அரச அதிகாரம் முற்படுகின்றது.

தெற்கின் சூழல் இவ்வாறிருக்க வடக்கு கிழக்கில் இன்னுமொரு பெருங் கொடுமையான பேராபத்தான போதை பொருள் பாவனை நன்கு திட்டமிடப்பட்டு பாரிய அளவில் மாணவர்கள் இளையோரை நோக்கி காட்டாறு வெள்ளம் போல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இப் போதையெனும் காட்டாறு வெள்ளத்தினுள் மாணவர் சமூகமும் இளையோரும் மூள்கத் தொடங்கி யுள்ளனர். பல அழிப்புகளையும் இழப்புக்களையும் சந்தித்து பெருந் தியாகத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தும் இன்றுவரை மீண்டெழ முடியாமல் தவித்துக் கொண்டிருக்கையில் எதிர்கால சந்ததியினை வேரோடு சாய்ப்பதற்கு இப் போதை பாவனை பரவலாக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது.

இளம் சந்ததியினரை சூழ்ந்துள்ள இப் பேரவலத்தில் இருந்து அவர்களை மீட்டெடுத்து எதிர்கால சமூகத்தினரை பாதுகாக்க வேண்டிய மிகப்பெரும் பொறுப்பும் வரலாற்றுக் கடமையும் நம் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. இப்பெரும் பணியினை மேற்கொள்ள நாம் அனைவரும் கூட்டிணைந்த திருப்பணியினை திட்டமிட்டு விரைவாக செயற்படுத்த வேண்டும்

நமது வழமையான பாரம்பரிய பணிகளும் செற்பாடுகளும், ஒன்று கூடல்கள், நிகழ்வுகள், விழாக்கள், பண்டிகைகள், பாராட்டு மற்றும் வரவேற்பு நிகழ்வு களில் மாத்திரம் திருப்தி கண்டு வெறும் உணர்ச்சி மைய கற்பனைவாத ஆன்மீகத்தில் மிதந்து இவைகளில் மட்டும் திருப்தியும் நிலையில் இருந்து விடுபட்டு சூழல் மயப்படுத்திய செயற்பாட்டு ஆன்மீக மையத்தில் ஆண்டவர் இயேசுவின் முன்மாதிரியை எம்வாழ்வாலும் செயலாலும் வெளிப்படுத்தி இறையியலாளர் டியற்றிச் வொண்கொபர் கூறுவதினை போல சீடத்துவத்திற்கான இறை இயேசுவின் அழைப்பினை நாம் வாழும் சூழலில் பெறுமதி மிக்க சீடத்துவமாக மாற்றி அதன் மூலம் அநீதியினையும் தீமையின் கட்டமைப்பினையும் இல்லாதொழிக்க திருச்சபை சமூகம் தன்னை மறு உருவாக்கம் செய்து கொள்ள வேண்டும்.

"பிடுங்கவும் தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும் நடவும், இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன்". (எரேமியா.1:10)

வாருங்கள் நாம் அனைவரம் இணைந்து போதை இல்லாத இளம் சமூகத்தை உருவாக்க ஒன்றிணைந்து செயற்பட்டு நாம் வாழும் சூழலில் நமதாண்டவர் இயேசுவின் தியாக திருப்பணியினை அர்த்தமுள்ளதாக்குவோம்.

திரித்துவ திரியேக கடவுளின் இறை ஆசீர் நம் அனைவரோடும் கூட இருப்பதாக. மறு இதளில் சந்திக்கும்வரை..

மெதடிஸ்த திருச்சபை
மெதடிஸ்த தேவாலய வீதி,
காந்தி கிராமம், சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.

மறு இதளில் சந்திக்குவரை
அருள்பணி. கந்தையா ஜெகதாஸ்
ஆசிரியர்
தொடுவானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவையின் வருடாந்த 59ஆவது கூட்டத்தொடரில் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவைத்தலைவர் அருள்கலாநிதி K. J. அருள்ராஜா அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

வடக்கு கிழக்கு திருமாவட்ட அவையின் 59வது திருமாவட்ட கூட்டத்தின் உறுப்பினர்களாக கலந்து கொண்டிருக்கும் உங்கள் ஒவ்வொரு வரையும் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் வாழ்த்துகிறேன்.

பல்வேறு விதமான சவால்களின் மத்தியில் இவ்வாண்டில் இந்த வருடாந்தக்கூட்டம் நேரடியாக நடைபெறுவது கடவுளின் கிருபையே தவிர வேறொன்றுமில்லை.

நம்நாட்டின் வரலாற்றில் முன் எப்போதுமில்லாதவாறு மக்கள் பாரிய நெருக்கடிகளையும் மிகப் பெரும் சவால்களையும் நாளாந்த வாழ்வைக் கொண்டு நடாத்த முடியாத அளவிற்கு பெரும் துன்பத்துக்கு ஆளாகி வீதிக்கு இறங்கியிருக்கின்றனர் மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சனைக்கு சரியான தீர்வினையோ, வழிகாட்டுதலையோ முன்வைக்காமை யினால் நீதிக்கும் உண்மைக்கும் மானிட நேயத்திற்கும் எதிரான அவலமான சூழல் வலிந்து ஏற்படுத்தப்பட்டுள்ளது, சட்டம் ஒழுங்கு என்பவை முடக்கப்பட்டு, துன்பம்மிக்க வன்முறைச்சூழல் நாட்டில் பொறுப்புமிக்க வர்களாலேயே ஏற்படுத்தப்பட்டமை மிகவும் வேதனைக்கும், ஏமாற்றத்திற்கு முரிய விடயமாகும். தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை குறைவடையும் காலமாகவே தற்போதைய சூழ்நிலை அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரப் பின்னடைவும், இல்லாமை, இருந்தும் கிடைக்காமை, அடையாமை ஆகிய காரணங்களால் தனியாட்களின், குடும்பங்களின் உளநலத்தை சவாலுக்குட்படுத்தியுள்ளது. மக்கள் விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டு தாங்களே சாதாரணமாகத் தீர்க்கக்கூடிய சிறிய பிரச்சனைகளைக்கூட கையாள முடியாத அளவுக்கு வலு இழந்திருப்பது நமது நாட்டின் மனித வளத்தை கேள்விக்குறியாக ஆக்கியிருக்கிறது.

அத்தோடு பல்வேறு விதமான உடல், உளம் சார்ந்த அசௌகரியங்களை நமது மக்கள் எதிர்கொள்ளும் இந்த தருணத்தில் நாம் இங்கு பொறுப்பு வாய்ந்த தலைவர்களாகக் கூடியிருக்கிறோம்.

நமக்கு கிடைத்திருக்கும் இந்த பொறுப்பு வாய்ந்த தருணம் தனித்தாளாக குடும்பமாக சபைகளாக சேகரங்களாக அனைவரும் இணைந்து பணியாற்றுவதற்கு நாம் பெற்றுள்ள அரிய வாய்ப்பாகும்.

அண்மைக்காலங்களில் நமதுநாட்டு மக்களின் குரல்களில் திருஅவையின் குரலும் இணைந்து ஒலிப்பது நமது சமுகப்பொறுப்பை வெளிக்காட்டுகிறது.

வேதாகமம் நமக்குத் தருகின்ற சிறந்த உதாரணங்களிலே எகிப்துநாட்டில் ஏற்படவிருந்த பஞ்ச நிலையின் எச்சரிப்புக்கு அரசன் பெற்ற ஆலோசனையும் ஜோசப்பின் நியமனமும், அடுத்த 14 ஆண்டுகளின் பொருளாதார சீரமைப்பும் நாம் அறிந்தவை. அயல்நாடுகளில் இருந்து வருகிறவர்களையும் வாழவைக்கும் வளத்தை எகிப்து தேசம் பெற்றிருந்தது. (ஆதியாகமம் 37- 50 அதிகாரங்கள்.)

தன்னலமற்ற மனநிலையில் பொதுநலத்திட்டங்கள் வகுக்கப்படும் போதுதான் அவை பயன்தரு விருட்சமாக மாறும். சாலமோன் அரசனின் மகன் ரெகே பெயாமின் ஞானமற்ற அரசியல் நடவடிக்கை இஸ்ரவேலின் பிரிவுக்கும் துயருக்கும் வழிவகுத்தது போல பல்வேறு குழப்பமான சூழ்நிலையை நாம் சந்தித்து இருக்கிறோம். திருச்சபை எதிர்கொள்ளும் பல சவால்களுக்கு நமது ஆண்டவர் இயேசுவின் திருவுளம் குறித்த தெளிவும் அறிவும் நமக்கு வேண்டும். (1 இராஜா 14: 21-31)

கடந்த வருடம் திருமாவட்ட அவையாக நாம்சந்தித்த பல சவால்கள் இருந்தன. திருப்பணித்தளங்களிலே, சேகரங்களிலே இருக்கும் பலதேவைகளை நாம் எப்படிச்சந்திக்கப் போகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற ஆண்டு எனது செய்தியில் கூறியவண்ணம் சிறந்த தலைமைத்துவம் கொண்ட ஆன்மீகத் தலைவர்களை ஒவ்வொரு சபைகளிலும் நாம் உருவாக்க வேண்டும்.

நமது வழிபாடுகளும் அதனைத் தொடர்ந்த வாரம்முழுவதும் மக்களின் வாழ்வு முறைக்கும் தொடர்பேற்படுத்தும் வண்ணம் நமது செயற்பாடுகள் பொதுநிலையினரின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதில் தலைவர்களாகிய நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நமது சமுதாய மேம்பாட்டுத்திட்டங்கள் ஏன் போதிய பயனளிக்கவில்லை என்ற ஆய்வு நமக்கு வேண்டும். தகுதியான ஆன்ம தாகம் கொண்ட பணியாளர்களை நாம் பணியமர்த்துவதில் கடந்த காலங்களில் தவறவிட்டிருக் கிறோம். (அப்போஸ்தலர் 6:1-15 திருத்தொண்டர் பணியமர்த்தல்)

நமது திருச்சபை ஒழுங்குகள் சரியாக கடைப்பிடிக்கப்படாத நிலைமை யையும் நமது சேகரங்களிலே அவதானிக்கிறோம். இவை எதிர்காலத்தில் நமது திருச்சபைக்குப் பல சிக்கல்களை ஏற்படுத்தும். ஆதன விடயங்களில் மிகுந்த அவதானம் நமக்கு வேண்டும்.

எப்போதும் திருஅவையாக நாம் நமது பணிகளை முழு ஆர்வத்துடன் செய்யக் கூடிய இளம் தலைவர்களுக்கு வழி ஏற்படுத்த வேண்டும்.

திருப்பணியை முழு நேரப்பணியாகச் செய்யக்கூடியவர்களை நாம் அடையாளம் கண்டு ஊக்கப்படுத்த எல்லா நிலைகளிலும் நாம் செற்படவேண்டும்.

இறைவன் தற்போதைய சூழ்நிலையை மாற்றுவார் என்ற நம்பிக்கையை நாம் இழந்து விடாமல் தொடர்ந்து நமது விசுவாசப்பயணயத்தைத் தொடருவோம்.

இறையாசி என்றும் உங்களோடு இருப்பதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மெதடிஸ்தம்

## இறையரசுப் பயணத்தில் 208 ஆண்டுகள் கடந்தும்...

கிறிஸ்தவ உலக வரலாற்றில் இங்கிலாந்தின் அப்போஸ்தலன் என அழைக்கப்படும் அங்கிலிக்கன் திருச்சபையின் குருவானவராக இருந்த அருட்பணி ஜோன் வெஸ்லி அவர்களின் சீர்திருத்த இறையியல் சிந்தனை திருப்பணியில் உருவாகியதே மெதடிஸ்த இயக்கமாகும் பதினாறாம் நூற்றாண்டில் கடவுளை விட்டு தூரம் போயிருந்த ஐரோப்பிய மக்களை கடவுளண்டை கொண்டு வந்த சிறப்பு மார்ட்டின் லூத்தரை சாருமென்றால் பதினேழாம் நூற்றாண்டில் கடவுளை விட்டு தூரம் போயிருந்த மக்களை கடவுளண்டை கொண்டுவந்த பெருமை ஜோன் வெஸ்லி அவர்களைச்சாரும்.

ஐரோப்பாவில் முதன்மை திருப்பணி மையமாக விளங்கிய மெதடிஸ்த திருச்சபை பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தனது திருப்பணியினை பல இடங்களில் ஆரம்பித்தது இங்கிலாந்து மெதடிஸ்த திருச்சபையின் குருவானவரும் ஐரிஸ் மெதடிஸ்த திருச்சபையின் தலைவராகவும் அமெரிக்க மெதடிஸ்த திருச்சபையின் முதல் ஆயராகவும் பணியாற்றிய அருட்கலாநிதி.தோமஸ் கோக் அவர்கள் ஆசியாவில் திருப்பணியினை ஆரம்பிப்பதற்கு தரிசனமுடையவராக இருந்தார். இதற்காக திருஅவையின் திருப்பேரவையிடம் அனுமதி கோரி விண்ணப்பித்தார் ஆனால் அருட்கலாநிதி.தோமஸ் கோக் அவர்கள் அறுபத்தி ஐந்து வயதை கடந்தவராக இருந்ததாலும் வேறு சில நடைமுறைக்காரணங்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்காகவும் திருப்பேரவை ஆரம்பத்தில் அனுமதி வழங்கவில்லலை எனினும் தன்னுடைய இறை தரிசனத்தில் சற்றும் தளராதவராகிய அருட் கலாநிதி.தோமஸ் கோக் அவர்கள் திருப்பேரவையிடமும் திருச்சபை தலைமையிடமும் மீண்டும் விண்ணப்பித்து அனுமதி பெற்று தனது அனைத்து சொத்துடமைகளையும் விற்று நான் ஐரோப்பாவுக்கு மரித்தவனாகவும் ஆசியாவிற்கு வாழ்பவனாகவம் இருக்கிறேன் எனும் கூற்றுடன் இலங்கை திருப்பணிக்கான பயணத்தை ஆயத்தப்படுத் தினார்.



**நான்**

**ஐரோப்பாவுக்கு மரித்தவனாகவும்**

**ஆசியாவிற்கு வாழ்பவனாகவும்**

**இருக்கிறேன்**

- அருட் கலாநிதி. தோமஸ் கோக் அவர்கள்

இலங்கையில் திருப்பணிக்காக அருட்கலாநிதி.தோமஸ் கோக் அவர்களுடைய தலமையில் அருட்பணியாளர்களாகிய ஜேம்ஸ் லிஞ், வில்லியம் ஓல்ட், தோமஸ் ஸ்குவான்ஸ் பெஞ்சமின் கிளவ், ஜோர்ஜ் ஏஸ்கின் என்பவர்களும் வில்லியம் ஓல்ட் அவர்களுடைய மனைவி திருமதி.சாரா ஓல்ட் (இவர்கள் திருமண வாழ்வில் இணைந்து ஒருமாதமே ஆகியிருந்தது). அவர்களும் 1813 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ம் திகதி லண்டன் ஸ்போற்ஸ் மவுத் துறைமுகத்தில் இருந்து லேடி மெல்வி எனும் கப்பலில் பயணத்தினை ஆரம்பித்தனர். கடற் பயணத்தின் போது பலசவால்களையும் இடர்பாடுகளையும் பலதடவைகள் வாழ்வா சாவா என்ற மரணபோராட்டத்தையும் சந்தித்தனர். பேராபத்துமிக்க கடற்பயணத்தின் போது திருமதி சாரா ஓல்ட் அவர்கள் நோயுற்று இறந்துபோனார். தொடர்ந்து பயணத்தில் எந்த இடத்தில் திருப்பணியை ஆரம்பிக்க தரிசனத்தோடு விடா முயற்சியோடும் பயணத்தை ஆரம்பித்த அருட்கலாநிதி.தோமஸ் கோக் அவர்கள் அவ்விடத்தின் கரை காணாமலே கடற்பயணத்தில் இறந்து போக தமது தலைவனை இழந்த திருப்பணியாளர்கள் நிலை தடுமாறினாலும் அழைத்தவர் உண்மையுள்ளவர் என்கின்ற இறைவார்த்தையின் மீது நம்பிக்கைவைத்து இஸ்ரவேலரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விடுதலைப்பயணத்தின் போது இறைவன் வாக்களித்த சுதந்திர தாயகமான கானான் தேசத்தை நோக்கிய தியாகப்பயணத்தில் தலைவர் மோசே இறந்தபோது யோசுவா மூலம் தாம் வாக்களித்த சுதந்திர தாயகத்தில் மக்களை கூட்டிச் சேர்த்து தனது திட்டத்தை நிறைவேற்றிய ஆண்டவர் நிச்சயமாக எம்மை வழிநடத்துவார் என உறுதியாக நம்பியவர்களாய் பயணத்தை தொடர்ந்தனர்.

பயணத்தை தொடர்ந்த திருப் பணியாளர்கள் 1814 ம் ஆண்டு யூன் 29ம் திகதி புதன் கிழமை காலியில் உள்ள வெலிகம என்ற இடத்தில் வந்திறங்கினர். இலங்கையில் வந்திறங்கிய - திருப்பணியாளர்கள் தமது முதலாவது நன்றி செலுத்தும் வழிபாட்டை காலிக் கோட்டையில் உள்ள ஒல்லாந்த சீர்திருத்த ஆலயத்தில் நடாத்தினர். பின்னர் திருப்பணிக்காக யார் எந்தெந்த இடங்களுக்கு செல்லவேண்டும் எனகலந்துரையாடி மட்டக்களப்பிற்கு அருட்பணி வில்லியம் ஓல்ட் அவர்களும், யாழ்ப்பணத்திற்கு அருட்பணியாளர்கள் ஜேம்ஸ் லிஞ், தோஸ் ஸ்குன்ஸ் அவர்களும், காலிக்கு அருட்பணி. பெஞ்சமின் கிளவ் அவர்களும் மாத்தறைக்கு அருட்பணி ஜோர்ஜ் ஏஸ்கின் அவர்களும், செல்லுவது எனமுடிவு செய்யப்பட்டது.

இலங்கையில் மெதடிஸ்ததிருப்பணியார்கள் திருச்சபை உருவாக்கப்பணியையோ அல்லது திருச்சபை விஸ்தரிப்பு பணியையோ மேற்கொள்ளாது கல்விப்பணியையே முதன்மைப் பணியாகச்செய்தனர். “கல்விப்பணியே கடவுள்பணி” என்பதே இவர்களது தாரக மந்திரமாக திகழ்ந்தது. அவ்வகையில் கட்டமைக்கப்பட்ட பாடசாலைக்கல்வியை இலங்கைக்கு அறிமுகம் செய்தவர்கள் மெதடிஸ்த திருப்பணியாளர்களே. இலங்கையில் எங்கெல்லாம் மெதடிஸ்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷனறிகள் கல்விப்பணியை ஆரம்பித்தார்களோ அங்கெல்லாம் மிகப்பிரமாண்டமான பாடசாலைக்கட்டடங்களையும் மிகச்சிறிய ஆலயங்களும் அமைந்திருப்பதே அவர்கள் கல்விப்பணிக்கு கொடுத்த முதன்மைக்கும் முக்கியத்துவத்திற்கும் சான்றாகும். இப்பணியில் அன்றைய சமுகக்கட்டமைப்பில் சமுகவேறுபாடுகள் ஏற்றத் தாழ்வுகள் காரமாகக் கல்வியுரிமை சமத்துவம் மறுக்கப்பட்டிருந்த பலருக்கும் பெண் கள் மத்தியிலும் அனைவருக்கும் கல்வி இலவசக்கல்வி என்கின்ற இலக்கில் செயற்பட்டமை மிகப் பெரிய சமுகப் புரட்சியும் சீர்திருத்தமுமாகும் இதன் மூலம் அறிவாற்றல்மிக்க புரட்சிகரமான சீர்திருத்த மிக்க சமுகம் இந்நாட்டில் உருவாகவும் இந்நாட்டின் கல்வித்தரம் உலகளாவிய ரீதியில் உயர்ந்திருக்கவும் பலகல்வியளாளர்கள் உருவாகவும் மெதடிஸ்த திரு அவையின் பணியே சிறப்பான அத்திவாரமாக அமைந்தது.



தன்னுடைய ஆருயிர் மனையியை இழந்தும்,அதே பயணத்தில் தனது தலைவணை இழந்த பேரிழப்பு அவரைச் சூழ்ந்திருந்தபோதும் வேதனை இடர் நெருக்கடி ஆகியவற்றை மிகுந்த மன உறுதியோடுய தாங்கி சவால்கள் மத்தியிலும் திருப்பணியினை அர்பணிப்புடனும் தாக்கத்துடனும் ஆரம்பித்தார்

## தமிழர் தாயகத்தில் மெதடிஸ்த திருப்பணி

தமிழர் தாயகமாகிய வடக்கு கிழக்கில் மெதடிஸ்த திருப்பணியின் முன்னோடிகளாக தாயகத்தில் அறியாமை எனும் இருளை அகற்றி அறிவு எனும் ஒளியை ஏற்றிய திருப்பணியாளர்கள் வில்லியம் ஓல்ட், ஜேம்ஸ் லிஞ், தோமஸ் ஸ்குவான்ஸ் என்பவர்களாவார்கள் ஈழத் தமிழர்களின் பெரும் சொத்தாகிய கல்வியை தமிழர் தாயகத்தில் முதன் முதல் விதைத்த ஒப்பற்ற பெருமை இவர்களையே சாரும். இவ்வகையில் ஈழத்தமிழர்களின் வரலாற்றில் இவர்கள் தனிவரலாறாகத் திகழ்கின்றனர். அருட்பணியாளர்களாகிய ஜேம்ஸ் லிஞ், மற்றும் தோமஸ் ஸ்குவான்ஸ் அவர்கள் 1814 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


11 ம்திகதி யாழ்ப்பாணத்தில் கால் பதித்தனர். அதேபோல அருட்ணியாளராகிய அருள்பணி வில்லியம் ஓல்ட் அவர்கள் 1814 ம் ஆண்டு ஓகஸ்ட் 12 ம் திகதி மீன்பாடும் தேன்நாடாம் மட்டுமா நகரில் கால்பதித்தார் திருமணமாகி ஓரே மாதத்தினுள் கடற்பயணத்தின் போது தன்னுடைய ஆருயிர் மனைவியை இழந்தும் அதே பயணத்தில் தனது தலைவனை இழந்த பேரிழப்பு அவரைச் சூழ்ந்திருந்தபோதும் வேதனை இடர் நெருக்கடி ஆகியவற்றை மிகுந்த மன உறுதியோடு தாங்கி வருகிறோம் என்ற பவுலடியாரின் வார்த்தையினை வாழ்வாகக்கொண்டவராக பல நெருக்கடிகள் சவால்கள் மத்தியிலும் திருப்பணி யினை அர்ப்பணிப்புடனும் தாக்கத்துடனும் ஆரம்பித்தார் இப்பணியின் ஆரம்பமாக மட்டு நகரின் ஐந்து மாணவர்களை ஒன்று சேர்து தமிழர் தாயகத்தில் முதலாவது பாடசாலையாகிய மெதடிஸ்த மத்தியகல்லூரியினை மட்டு நகர மையத்தில் ஆரம்பித்து தேசத்தின் மிகப்பெரும் அறிவுச்சுடரை எற்றிவைத்தார்.

தமிழ்மொழியினை நன்கு கற்று தமிழ் மொழியில் அருளுரையாற்றியும் பல பிரதேசங்களுக்கு கால்நடையாகச்சென்றும் மக்களை சந்தித்து நற்பணி யாற்றினார். தனது எட்டு மாத திருப்பணியில் எட்டுப்பாடசாலைகளை ஆரம்பித்து அர்ப்பணிப்புமிக்க வியத்தகு திருப்பணியினை ஆற்றினார். ஆழ்ந்த கல்விப்புலமையும் அறிவுச் செழுமையும் எழுற்சியுற அடித்தள மிட்டதோடு கிழக்கில் உறுதிமிக்க வலுவான மெதடிஸ்த திருச்சபை சமூகம் உருவாகவும் வித்திட்டார். 1815ம் ஆண்டு ஏப்ரல் முதலாம் நாள் உங்களுக்கு என் இருதயத் திற்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன் அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்பார்கள் இதோ உம்மி டத்தில் வருகிறோம் நீரே எங்கள் தேவனாகிய கர்த்தர் எனும் எரேமியா இறைவாக் கினரின் திருவார்த்தைகளை கேட்டுக்கொண்டு மறுமைக் குள் அழைத்துக் கொள்ளப் பட்டார் கிழக்கில் தாக்கமிக்க உன்னத இறைபணிக்காக தன் வாழ்வையே கொடுத்த அருட்பணி வில்லியம் ஓல்ட் அவர்களின் வாழ்வுக்கும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பணிக்கும் சான்றாதாரமாக அவரின் கல்லறை மட்டு நகர மையத்தில் அமைந்துள்ளது. இலங்கையில் வந்திறங்கிய திருப்பணியாளர்களுக்கு அருட்பணியாளர் வில்லியம் ஓல்ட் அவர்களே தலைவராக திகழ்கிறார் (தலைவர் அருட்கலாநிதி தோமஸ் கோக் அவர்கள் கடற்பயணத்திபோது மரணமடைந்ததால் அவருக்கு அடுத்தான சிரேஸ்ட குருவானவராக அருள்பணி வில்லியம் ஓல்ட் அவர்களே இருந்ததால் தலைவராக நியமனம் பெற்றார்) அருள்பணி.வில்லியம் ஓல்ட் அவர்களின் மறைவுக்குப்பின்னர் அருள்பணி.ஜேம்ஸ் லிஞ் அவர்களே தலமைப் பொறுப்பினை ஏற்றார்.

யாழ்பாணத்தலில் திருப்ணிக்காக வந்த அருட்பணியாளர்களாகிய ஜேம்ஸ் லிஞ் அவர்களும் தோமஸ் ஸ்வான்ஸ் அவர்களும் தமிழ் மொழியினைக் கற்று பல்வேறு சவால்கள் மத்தியில் மிக அர்ப்பணிப்பு மிக்கபணியாற்றினர் அவர்களின் தியாகப்பணியினை மைல்கல்லாக யாழ் நகர மையத்தில் லூதரன் திருச்சபையால் ஆதரவற்றோருக்கான பராமரிப்பு விடுதி நடத்தப்பட்ட






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியினை விலைக்கு வாங்கி அவ்விடத்தில் அருட்பணியாளர் ஜேம்ஸ் லிஞ் அவர்கள் 1816 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் முதலாம் திகதி தமிழர் தாயகத்தின் இரண்டாவது பாடசாலையாகிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினை ஆரம்பித் தார் இதன் மூலம் அன்றய யாழ்பாண சமுக கட்டமைப்பில் கல்வி என்பது கோவில்பற்று சமயக் கல்வி என்கிற கல்விக்கட்டமைப்பில் மேட்டுக்குடியினருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட கல்வியினை சமுக வரையறைகளை தகர்த்து அனைவருக்கும் கல்வி என்ற சமத்துவ கல்வியினை அறிமுகம் செய்ததன் மூலம் மிகப் பெரும் சமுகப் புரட்சியினை ஏற்படுத்தினார்.

எனவே கட்டமைக்கப்பட்ட பாடசாலைக் கல்வியியை மட்டுமல்ல அனைவருக்கும் கல்வி இலவசக்கல்வி என்கின்ற திட்டத்தினையும் முதல் முதல் அறிமுகம் செய்து கல்வியினை சமுக மயப்படுத்தியவர்கள் மெதடிஸ்த திருப்பணியாளர்களே. தமிழர் தாயகத்தில் ஆரம்ப மெதடிஸ்த அருட்பணியாளர் களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இருபெரும் அறிவாலயங்களான மட்டு மத்திய கல்லூரியும் யாழ் மத்திய கல்லூரியும் தமிழர் தாயகத்தில் கல்வியின் இரு கண்களாகும். அறிவாற்றல் மிக்க புரட்சிகரமான சீர்திருத்தமிக்க சமுகம் உருவாகவும் . இந்நாட்டினதும் குறிப்பாக தமிழர்களின் கல்வித்தரம் உலகளாவிய ரீதியில் உயர்ந்திருக்கவும் பல கல்வியாளர்கள் சிந்தனையாளர்கள் அறிஞர்கள் உருவாகவும் இவ்விரு கல்லூரிகள் சிறப்பான அத்திவாரமாக அமைந்தது மாத்திரமன்றி இன்றுவரை இக்கல்லூரிகளின் கல்விப்பணி சுடர் விட்டு ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றது.

அன்று ஆண்டவர் இயேசுவின் பேரருளாலும் வழிநடத்தலாலும் தமிழர் தாயகத்தில் தொடக்க மெதடிஸ்த அருட்பணியாளர் வில்லியம் ஓல்ட், ஜேம்ஸ் லிஞ், தோமஸ் ஸ்குவான்ஸ் அவர்களால் ஏற்றிவைத்த திருப்பணி தீபம் இன்றுவரை சுடர்விட்டு பேரொளி வீசிக்கொண்டிருக்கின்றது எமது மெதடிஸ்த மிசனறிகளின் தியாகமிக்க திருப்பணிகளுக்காக விசுவாசத்தை தொடக்குகிற வரும் முடிக்கிறவருமாய் இருக்கின்ற ஆண்டவர் இயேசுவின் பாதம் பணிந்து நன்றி கூறி அவர்களின் முன்மாதிரியான சாட்சிய வாழ்வையும் தியாகமிக்க திருப்பணியையும் எமது சமகால திருப்பணிக்கு முன்னுதாரணமாக கொள்வோமாக.


**-ஆசிரியர்**
தொடுவானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால சிந்தனை

# உயிர்ப்பும் சாட்சியும்



ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு குறித்த அவரது அடியவர் கொண்டிருந்த பல்வேறு புரிந்து கொள்ளுதல் திருமறையில் பதியப்பட்டுள்ளது. அவற்றை பல்வேறு நற்செய்திப் பாரம்பரியமாக இறையியலாளர் கணித்து வருகின்றனர். புதிய ஏற்பாட்டில் எழுத்து வடிவம் பெற்றவைகளில் பவுலடிகளாரின் எண்ண வடிவமே மிகவம் பழமையானவை. எனினும் வாய்மொழிப் பாரம்பரியம் என எடுத்துக் கொள்வோமேயாயின், நற்செய்தி நூல்களில் காணப்படும் பதிவுகளே மிகப் பழமையானவைகளாகும்.

ஆண்டவர் இயேசு உண்மையிலேயே உயிர்த்தாரா எனப் பல முனைகளிலிருந்து கேள்வி எழுப்பப்பட்ட சூழலிலேயே அவர் உண்மையிலேயே உயிர்த்தார் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியை அவரது அடியவர் திருமறையில் பதிந்து வைத்தனர். பவுல் அடிகள் மிகவும் ஆர்வத்தோடு, ஆண்டவரின் உயிர்ப்பு சார்ந்த சாட்சியை வழங்குகிறார். "கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்ப்பு இல்லையென உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாமென வினாவெழுப்புகிறார்." (1கொரி 15:12)

இவ் ஐயப்பாட்டிற்கு முடிவு கட்ட எண்ணியவராய் "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானவர்" (1கொரி 15 : 20) என்கிறார். (The first fruits of those who have fallen asleep) முதற் பலன் (first fruits) என்பதற்கு இறையியலாளர் பல சிறப்பான பொருள் தந்தள்ளனர். இனி வந்து குவியப்போகும் திரளான சாகுபடிக்கு (அறுவடை) இது முதற்பலன் (first in srallment) என்கிறார். Barrett C.K அவர்கள். ஒரு பழத்தோட்டத்தின் அத்தனை பழங்களும் நன்றாக முற்றிக் கனிந்துள்ளன என்பதற்கு அத்தாட்சியாக அத்தோட்டத்தின் மரங்களில் காய்ந்து, கனிந்த ஓர் பழமே போதும். அது போன்று அவரது அடியவர் அனைவரின் உயிர்த் தெழுதலுக்கு ஆண்டவர் இயேசு ஒருவரின் உயிர்ப்பே அத்தாட்சி என்பதையே பவுல் அடிகள் முதற்பலன் (first fruit) எனும் சொல்லின் மூலம் சுட்டுகிறார் என Ridderbos என்பவர் கூறுகிறார்.இக் கூற்று நாம் தமிழில் "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" எனும் பழமொழிக்கு ஒத்தாக இருக்கின்றது.

அடுத்து நற்செய்தி நூல்கள் நமக்கு காத்து வழங்கும் "ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு "சார்ந்த பாரம்பரியங்களைப் பார்ப்போம். ஆண்டவரின் பிறப்பை நான்கு நற்செய்தி நூல்களும் வழங்காவிடினும், அவரது கொடிய சிலுவை மரணம் மற்றும் உயிர்ப்பு சார்ந்த சாட்சியை வலுவாகப் பதித்து வைத்துள்ளன.

அவற்றை இருபெரும் பாரம்பரியமாகவும், இருவேறு கூறுகளாகவும், காணலாம். அவற்றில் தகவலே மிகவம் பழமையானது எனத்துணிந்து கூறலாம்.

பாரம்பரியம் என எடுத்துக் கொள்வோமாயின், அவற்றை கலிலேயப் பாரம்பரியம் மற்றும் எருசேலம் பாரம்பரியம் எனவும் பவுல் அடிகள் தோற்றுவித்த கிறிஸ்துவின் அடியவர் சார்ந்த சமூகங்கள் (Pauline Communities) காத்துக் கொண்ட பாரம்பரியம் எனவும் கூறலாம்.

ஆண்டவரின் உயிர்ப்பு சார்ந்த கூறுகள் (Units) என எடுத்துக் கொள்வோமாயின், ஆண்டவரின் உயிர்ப்பு "காலியான கல்லறை" (Empty



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tomb Tradition) சார்ந்த பாரம்பரியம் எனவும், "உயிர்த்த ஆண்டவரின் திருக்காட்சி" (Resurrection Appearances of the Lord) ரார்ந்த பாரம்பரியம் எனவும் வகுக்கப்பட்டு, திருமறையில் பதியப்பட்டுள்ளதைக் காணலாம்.

கல்லறை காலியாக இருக்கின்றது. அவரது உடல் அங்கில்லை. எனவே அவர் உயிர்த்தார் என அவரது நம்பினர் எனும் பாரம்பரியம் (மத் 28: 5-7, மாற் 16: 1-8., லூக் 24: 1 -9, யோ 20:9).அடுத்தது, உயிர்த்த ஆண்டவரே அவரது அடியவருக்கு திருக்காட்சி தந்தார். எனவே அவரைக் கண்டு அவரது சீடர் உயிர்ப்பில் நம்பிக்கை வைத்தனர் எனும் பாரம்பரியம் (மத் 28: 9-10, 16-20, லூ 24: 30-32,யோ 20: 21).

காலியான கல்லறை எருசலேம் பாரம்பரியம் சார்ந்ததாக மட்டுமே உள்ளது. ஆனால் உயிர்த்த பாரம்பரியம் கலிலேயா மற்றும் எருசலேம் பாரம்பரியம் சார்ந்தவையாக உள்ளன.

**ஆண்டவரின் உயிர்ப்பும் பெண்களின் மாண்பும்**

ஆண்டவர் அழைத்த பன்னிரண்டு சீடர் அவருடன் இணைந்து ஆற்றிய பணிகள் மிகவுயர்வாகக் கருதப்படக்கூடியவை. அவ்வண்ணமே ஆண்டவரின் வாழ்வு மற்றும் பணியில் பெண்கள் ஆற்றிய பணி மற்றும் பங்களிப்பு மிகச் சிறப்பானவை.(லூ 8: 2-3)

ஆண்டவர் இயேசுவை யூதர்களின் தலைமை ஆசாரியனின் வேலையாட்கள் கைது செய்த பொழுது, ஆண்டவருடன் இருந்த அனைவரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள் (மாற் 14:50). அவரைப் பின்தொடர்ந்த ஓர் வாலிபன் தன் ஆடையையும் விட்டு வெறுமனே ஓடித் தப்பினான் (மாற் 14:51). துவக்கத்தில் மிகவும் துணிச்சலாக ஆண்டவரைக் கைது செய்ய வந்தவர்களில் ஒருவனை காது அற வெட்டிய பேதுரு (யோ 18:10, மத் 26:51) பின்பு அவரை ஒர போதும் கண்டதில்லை. அவரை அறியேனென மறுதலித்தார். (மத் 26: 69-75). யூதாஸ் அவரை முப்பது வெள்ளிக்காசை ஏற்று அவரைக் காட்டிக் கொடுத்தான். (மத் 26: 14-16).

ஆயினும் பெண்கள் அவரது துன்பவேளையில் பொறுப்புடனும் துணிவுடனும் செயல்பட்டனர் (மாற் 165:40 - 41). அவரது உடலைக் கல்லறையில் வைத்து மூன்று நாட்கள் ஆயின. மூன்றாம் நாள் ஓய்வு நாள் முடிந்தவுடனே, வாரத்தின் முதல்நாள் விடிந்து வருகையில் (இருட்டோடே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகதலேனா மரியாள், மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். (மத் 25:1). எதையும் உண்மையென உறுதிப்படுத்த இரு சாட்சிகள் வேண்டு மென்பதில் மத்தேயுவின் ஆசிரியர் உறுதியாக இருப்பதைக் காணலாம்.

ஆயினும் இதே கூற்றை மாற்கு கூறும் பொழுது, மகதலேனா மரியாள், யாக்கோபின் தாயாகிய மரியாள் மற்றும் சலோமே என மூவர் எனக் குறிப்பிடுவதோடு, அவர்கள் ஓய்வு நாளான பின்பு வாரத்தின் முதல் நாளில் அதிகாலையில் சூரியன் உதயமாகிற போது கல்லறையினிடம் வந்தார்கள் எனக் குறிப்பிடுகிறார். பெண்கள் இருட்டில் தட்டுத்தடுமாறி தவறானவொரு கல்லறையிடம் சென்று, அக்கல்லறை வெறுமனே இருப்பதைக் கண்டு அவர் உயிர்த்து விட்டாரென தவறாகக் கூறி விட்டனர் எனும் பழிச்சொல் வராமலிருக்க " சூரியன் உதயமான போது" (மாற் 16: 1-2) எனக் கூறுவதோடு அவரைக் கல்லறையில் வைத்த போது, அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் பார்த்தார்கள். (மாற் 15:47) எனவே அவர்கள் தவறான கல்லறையிடம் செல்லவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறார்.

யோவான நற்செய்தி ஆசிரியர்,காலியான கல்லறையை முதன்முதலாகக் கண்டு, அச் செய்தியை பதினொரு சீடருக்கு முதன்முதலாக அறிவித்தது (மகதலேனா மரியாள்) ஓர் பெண்ணே என அழுத்திக் கூறுகிறார். (யோ 20: 1-2). அத்தடன் உயிர்த்த ஆண்டவரின் திருக்காட்சியை முதன் முதலாகக் கண்டதும் (மகதலேனா மரியாள்) ஓர் பெண்ணே எனவும் துணிந்து அறிவிக்கிறார். (யோவான் 20: 11-18) வெறுமையான கல்லறை. உயிர்த்த ஆண்டவரின் திருக்காட்சி இரண்டையும் ஏனையோருக்கு முதன்முதலாக அறிவித்தது இப்பெண்தான் (யோ 20: 2;18).

## ஆண்டவரின் உயிர்ப்பும் சமத்துவமும்

உலகில் மனுக்குலத்தின் செயல்பாடுகளை முடக்கி வைக்கவும் அவர்களின் விடுதலைச் சிற்தனையை ஒடுக்கிவிடவும் வழிவாய்ப்பாய் அமைவது பணபலம், ஆட்சியதிகாரம் மற்றும் மரண அச்சுறுத்தல் ஆகியவையாகும். இவைகளும் அஞ்சாது அவற்றை மெற்கொண்டு வெற்றி சிறந்தவர் நமதாண்டவர்.

அவர் உயிர்த்த பின்பு, எம்மாவு என்கிற கிராமத்திற்குச் செல்லுகிறார் (லூ 24: 13-31) எம்மாவு எனும் பகுதியில்தான் பாலத்தீனாவின் மிகப்பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவமுகாம் இருந்தது. உயிர்த்த ஆண்டவர் மிகவும் பலம் பொருந்திய வோர் இராணுவச் சமூகத்தை நோக்கி வெறுங்கையுடன், காயப்பட்ட கையுடன், சமாதான வேந்தராகச் செல்வதைக் காண்கிறோம். அவ்வழியில் இருவரைச் சந்திக்கிறார். அவர்கள் ஆண்டவரின் சீடராயிருந்தும் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவர்களோடு பல மறையுண்மைகளை ஆண்டவர் பகிர்ந்து கொண்ட பாதும் அவர்களால் அவரை இனங்கண்டு கொள்ள முடியவில்லை. இது சீடத்துவத்தின் பெருங்குறையாகும். அவர்களின் அழைப்பிற்கிணங்க அவர்களுடன் தங்கச் செல்லுகிறார். இரவ உணவு அவர் முன்வைக்கப்படுகின்றது. பாலத்தீனத்தின் மிகப்பெரிய அப்பமாக ( ரொட்டி) இருந்திருக்கலாம். உணவ உட்கொள்ளும் முன் விருந்தினர் மன்றாடுவதே வழக்கம். ஆண்டவர் இயேசு அப்பத்தை எடுத்த உயர்த்தி, தோத்திரம் செலுத்தி சீடருக்கும் அவரின் இல்லத்தாருக்கும் கொடுத்தார். அப்பொழுது அவரின் கண்கள் திறக்கப்பட்டதாய் திருமறை பகிர்கின்றது. இதன்மூலம் அவர் எந்த அளவு சீடர் மற்றும் மக்களுடன் உணவுப்பொருள் மூலம் தொடர்பு கொண்டாரென்பது தெரிய வருகின்றது.

அவர் மீதிருந்த குற்றச்சாட்டுகளில், அவர் "உயவு விரம்பி" என்பதுமொன்று (மத் 11:18-19). சகேயுவை உணவு உண்ண அழைக்கிறார் (லூ 19: 1-10). தொழுநோயாளன் சீமோன் வீட்டில் உணவு உண்பவராகவே காணப்படுகிறார் (மத் 14: 3-9). மார்த்தாள் மற்றும் மரியாள் வீட்டில் உணவு உண்ணுவதே கதைக்கருவாகும் (லூ 10: 38-42). திரளான மக்களுடன் வெட்வெளியில் உணவு உண்டது வல்ல செயலாய்க் குறிக்கப்படுகின்றது. (மா 6: 35-44; 8:1-10). இவை வெறும் வேடிக்கை அல்லது கேளிக்கை நிகழ்ச்சிகளல்ல என்பதே பேருண்மை. இவை நமதாண்டவரின் திட்டமிட்ட செல்களாகும். (Delibrate attempts). இவ்வுணவுப் பந்திகள் அனைத்தும் சமவுரிமை வழங்கும் சமத்துவப் பந்திகளாகும்.உயர்வு தாழ்வற்ற, கற்றோர் கல்லாதோர் எனும் பேதமகற்றும், ஆண்,பெண் வேற்றுமை நீக்கும். சாதிவெறியின் வேரறுக்கும் அப்பட்டமான செயலெ இச்சமபந்தி உறவாகும்.

**ஆண்டவரின் உயிர்ப்பும் தலைமைத்துவப் போட்டியும்**

ஆண்டவரின் திருவிருந்துப் பந்தியில் இணையும் முன்சொல்லப்படும் மன்றாடல்களில் "ஆண்டவரே உமது திருப்பெயரைச் சொல்லியும் தீமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு விலகவில்லை. எங்களுக்க சுகமேயில்லை" என்பது ஒன்றாகும். தன்னை அரசனாக்க முயன்ற போது விலகியோடி (யோ 6:15) பாடு, மற்றும் கொடூர மரணத்தைச் சந்தித்து, அதன் மூலம் மெய்வாழ்வை நமக்கு உவந்தளித்த ஆண்டவரின் பெயரிலேயே அனைத்து அதிகாரப் போட்டிகளும் திரு அவை களில் இன்று நடைபெற்ற வருகின்றது. இவ் அவல நிலையை திருமறையிலும் காணலாம்.

ஆண்டவரை வைத்த கல்லறை காலியாக இருக்கிறதென மனதலேனா மரியாள், பேதுரு மற்றும் அன்பான சீடருக்குக் கூறினாள். அதைக் கேட்டதும் பேதுரு கல்லறையை நோக்கி விரைகிறார் (யோ 20: 1-2). ஆயினும் மற்ற சீடன் கல்லறையைக் குனிந்து பார்த்தாரேயொழிய உள்ளே செல்லவில்லை. பிந்தி வந்த பேதுரு மற்ற சீடரை முந்திக் கொண்டு முதலாவதாகக் கல்லறைக் குள்ளே சென்றார். மற்ற சீடன் பேதுருவை முந்திக் கொண்டு ஆண்டவர் உயித்ததாக நம்பினார் (யோ 20: 1-10).

பேதுரு ஆண்டவரை மறுதலித்தவர் எனும் அவப் பெயரை ஈட்டிக் கொண்டதால், அவரைப் பின் தள்ளிவிட்டு, ஆண்டவருக்குப் பின் அடுத்த தலைவராய் வர ஏற்பட்ட தலைமைத்துவப் போட்டியே இங்கு இலைமறை காயாய் சுட்டப்படுகின்றது. ஆண்டவருக்குச் சாட்சியாய். வாழ்ந்து, அவர் திருநாமத்தில் பணியாற்றுவது பாடுகள் நிறைந்தவோர் தேர்வாகும். அது மலர்கள் தூவப்பட்ட இலகுவான பயணமல்ல. முட்கள் நிறைந்த கடுமையான வழிப்பாதை கொண்டதாகும்.

நமதாண்டவர் இப்பயணத்தில் நம்மை தனியே விட்டுவிடவில்லை. நமக்குமுன்னே நடந்து, வெற்றி சிறந்து, நம்மை வரவேற்கக் காத்திருக்கிறார்.

உன்னை அழைத்த நான் வாழ்த்துவேன்.... வாழ்த்துவேன்......
வாழ்த்துவோம்!

**அருள்பணி. முத்தையா செல்வராசா**
B.D.( Seram) MTH ( Seram)
புதிய ஏற்பாட்டு துறை விரிவுரையாளர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பொருளாதார நெருக்கடி
## ஏற்படக் காரணங்களும்
## வடகிழக்கு பகுதியில்
## அதன் தாக்கமும்



**சமூகப்பொருளாதார வரலாற்று ரீதியான பார்வை**

இலங்கை முழுமையாக தோல்வியடைந்த நாடாக மாறிவிட்டது. மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு ஏற்ப சேவை வழங்குவதில் இலங்கை தோல்வியடைந்து விட்டது. இலங்கையில் மக்களிற்கும் நாட்டிற்கும் ஏற்படும் சமூக பொருளாதார அரசியல் தாக்கத்தினை ஈடுசெய்ய முடியாத நிலையில் இலங்கை காணப்படும் நிலையினை இப்பத்தி வெளிப்படுத்துகின்றது.

இலங்கை 1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி காலணித்துவத்திலிருந்து அரசியல் சுதந்திரம் பெற்றிருந்தது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்திருந்த சமூக, அரசியல், பொருளாதார கொள்கைகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைந்தது. 1950களில் ஆசியாவில் ஜப்பான மற்றும் மலேசியாவிற்கு அடுத்ததாக உயர் வருமானத்தினைக் கொண்டிருந்த இலங்கை படிப்படியாக பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனத்தை அனுபவிக்க தொடங்கியது. அக் காலத்தில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இலங்கை பொருளாதாரத்தடன் சம அளவில் இருந்த சிங்கப்பூர் இன்று பலநூறு மடங்கு வளர்ச்சி கண்டுள்ளது. இவ் வளர்ச்சி ஆசியாவின் அனைத்து பொருளாதாரத்திற்கும் முன்னுதாரணமாக திகழ்கிறது. போதிய நிலமோ, வளமோ இல்லாத ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிற்கு சிங்கப்பூர் ஒரு சிறந்த உதாரணமாகும். இலங்கை போன்று நிலமும் வளமும் நிறைந்த நாட்டில் பொருளாதார வீழ்ச்சி காணப்படுகிறது என்பது ஆய்வுக் குரியது. அந்த வகையில் இக்கட்டுரையில் இலங்கையின் அண்மைக்கால பொருளாதார, நெருக்கடியும் வட கிழக்கு மக்களின் பொருளாதாரம் மீதான அதன் தாக்கமும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

இலங்கை 65610 சதுர கிலோமீட்டர் பரப்பளவும் அண்ணளவாக 1340மஅ சுற்றளவும் அண்ணளவாக 524880 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள கடற்பரப்பும் கொண்டுள்ள தீவு நாடாகும். நாட்டின் மக்கள் தொகை 22.5 மில்லியனை கொண்டுள்ளது. நான்கு இனக்குழுக்களைக்கொண்ட நாடாகும். நிர்வாக நடவடிக்கைகளுக்கு 9 மாகாணங்களும், 25 மாவட்டங் களும்,332 பிரதேச உத்தியோகத்தர் பிரிவும்,14022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் கொண்ட தீவு நாடாகும். மிகவும் தொண்மையான வரலாற்று பின்னணி கொண்டதுடன் இலங்கையை செழிப்புட்ட 7மணிகளையும் 103 கதிர்களையும் கொண்டுள்ள செழிப்பான நாடு. இலங்கையில் மக்களின் கல்வியறிவு வீதம்(98.8) வாழ்க்கை எதிர்பார்ப்பு காலம் (75.34) மற்றும் சுகாதார மருத்துவ வசதிகள் மிகவும் உயர்வான நிலையில் கணப்படுகின்றன.

இலவச மருத்துவம், இலவச கல்வி (ஆரம்ப கல்வி தொடக்கம் உயர்கல்வி வரை) மற்றும் உணவு மானியயம் காணப்படுகின்ற நாட்டில் தலைக்குரிய வருமானம் அண்ணளவாக 4000 அமெரிக்க டொலர்களை கொண்டு நடுத்தர வருமானம் பெறும் நாடாக இலங்கை உள்ள நிலையில் இலங்கையில் பொருளாதார நெருக்கடி என்பது ஆய்வுக்குரியதுடன் இலங் கையின் அரசியல் சமூக பொருளாதார வரலாற்று போக்கும், பொருளாதார கொள்கைகள் வகுப்பதில் காணப்பட்ட மெத்தனப்போக்குமே பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச்சென்றிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் அரசியல் பொருளாதார வரலாற்றினை மூன்று பெரும் காலகட்டங்களாக பாகுபடுத்தலாம்.**

1. பண்டைய மன்னராட்சி காலம்:-வரலாற்று காலம் தொடக்கம் 1505ம் ஆண்டுவரை நீட்சியடைந்துள்ளது.
2. காலணித்துவக்காலம்- 1505ம் ஆண்டு தொடக்கம் 1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி வரையியான போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேயர் ஆட்சிக்காலங்களை உள்ளடக்கிய 443 வருட அன்னியர் ஆட்சிக்காலம்
3. இலங்கை சுதந்திரமடைந்த காலத்தினை தொடர்ந்துவந்த காலம் (1948.02.04ம் திகதியின் பின்னர்)

பண்டைய இலங்கை சுய சார்பான பொருளாதாரமாக திகழ்ந்தது. குறிப்பாக மன்னராட்சி காலத்தில் தன்னிறைவு பொருளாதாரமாக காணப் பட்டது. இக்காலத்தையே இலங்கை தொன்று தொட்டு தென்கிழக்காசியாவின் தானியக்களஞ்சியம் என்று கூறும் அளவிற்கு செழிப்பான பொருளாதாரமாக காணப்பட்டதை குறிப்பிடலாம். பண்டைய இலங்கையில் மன்னராட்சிக் காலத்தில் நீர்ப்பாசனம், நீர் முகாமைத்துவம் மிகவும் சிறந்த தொழிநுட்பத்துடன் காணப்பட்டதன் காரணத்தினால் தேசிய மரபுரிமைக்காக இலங்கை நீர்ப்பாசனக் கட்டமைப்பு யுனஸ்கோவினால் பிரகடனப்படுத்தப்பட்டு சிறப்பிக்கப் படுகின்றது. இரும்பு, செம்பு, உலோகம், உப உணவு உற்பத்தி, நெல் தானியம் போன்ற விவசாய உற்பத்தி விலங்கு வளர்ப்பு, பால், முட்டை உற்பத்தி போன்றவற்றில் இலங்கை தன்னிறைவு கொண்ட ஒரு நாடாக பண்டைய காலத்தில் காணப்பட்டதுடன் பண்டமாற்று முறையே அமுலில் இருந்தது.

சுருக்கச் சொன்னால் பண்டைய இலங்கை மக்கள் தன்னிறைவான பொருளாதார கட்டமைப்பில் வாழ்ந்தனர். மன்னராட்சியின் கீழ் வாழ்ந்திருப் பினும் மக்களின் தேவைகள் அறிந்து நிவர்த்திற்கும் நிலையில் நாடு தன்னிறைவு நோக்கிய பயணத்தை தொடர்ந்தது. இன்று அனுபவிக்கும் நீர்பாசன, நீர் முகாமைத்துவ கட்டமைப்பும், தொன்மையினை வெளிப்படுத்தும் கட்டுமானங்களும் பண்டைய இலங்கை மக்களின் வாழ்வியலினை அறிந்து கொள்ள உதவுகின்றன.

பண்டைய இலங்கையின் சுதேச மருத்துவமுறை சிறப்பான நிலையில் காணப்பட்டிருந்தமை இங்கு குறிப்படத்தக்க அம்சமாகும். உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற பண்டைய இலங்கையிலிருந்து வர்த்தக வணிக தொடர்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் உணவு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக உள்ளூரில் பண்டமாற்று முறையும் காணப்பட்டிருந்தது முக்கிய அம்சமாகும்.

**காலணித்துவ ஆட்சியில் இலங்கையின் பொருளாதாரநிலை**

இலங்கை 443 வருடங்கள் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்தமை பின்னர் இக்காலப்பகுதியில் ஏற்பட்ட சமுக, பொருளாதார அரசியால் மாற்றங்களினால் அடையாளப்படுத்தக்கூடிய பல விடயங்கள் இங்கே பதிவு செய்வது பொருத்தமானதாகும். காலனித்துவ ஆட்சியை 4 பிரதான காலப்பகுதிகளாகப் பிரித்து நோக்குவது பொருத்தமானதாகும்.

» போர்த்துகேயர் -1505-1658 வரை இலங்கையின் கரையோரப்பகுதி
» ஒல்லாந்தர்-1658-1796 வரை இலங்கையின் கரையோரப்பகுதி
» ஆங்கிலேயர்-1796-1815 வரை கண்டி இராசதானி தவிர்ந்த இலங்கையின் பிறபகுதி
» ஆங்கிலேயர்-1815-1948.02.04 வரை முழுமையாக (ஆங்கிலேயர் ஆட்சியில்)

இக்காலணித்துவ ஆட்சியாளரின் கீழ் பல்வேறு சமுக பொருளாதார மாற்றங்கள் நிகழ்ந்தன. இதுவரைகாலமும் சுய சார்பு பொருளாதார கட்கமைப்பில் இருந்து இலங்கை தற்போது காலணித்துவ ஆட்சியாளரின் தேவையினைப் பூர்த்தி செய்யும் உற்பத்தி கட்டமைப்பை நோக்கி நகரத்தொடங்கியது. குறிப்பாக மன்னராட்சிக்காலத்தில் காணப்பட்டிருந்த "இராஜகாரிய முறை" முற்றாக ஒழிக்கப்பட்டது. இதனால் உற்பத்தி பொருளாதாரத்தின் அபிவிருத்தியில் பாரிய மாற்றம் நிகழ்ந்தது. இராஜ காரிய முறையினால் உருவாக்கப்பட்ட பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் அத்துடன் இணைந்த விவசாய, உணவு உற்பத்தி முறைகள் கைவிடப்பட்டன. இது இலாபமீட்டும் முதலாளிகளின் வர்க்கம் தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்தது.

தேயிலை, இறப்பர், தெங்கு, கோப்பி, வாசணைத் திரவியங்கள், இரத்தினக்கற்கள் போன்ற தொழிற்துறை விருத்தியடையத்தொடங்கியது. பெருந்தோட்டங்கள் வளர்ச்சி பெற்றன. இதன் விளைவாக இரட்டை அல்லது கலப்பு பொருளாதார முறையின் கீழ் இலங்கையை காலனித்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியாளர்கள் ஆட்சிசெய்தனர். காலனித்துவ ஆட்சியாளர்கள் காலத்தில் தங்குநிலை பொருளாதாரம் மற்றும் சந்தைப்பொருளாதாரம் ஆகிய இரட்டை பொருளாதார கட்டமைப்பை இலங்கை தள்ளப்பட்டது. குறிப்பாக தங்குநிலை பொருளாதாரம் என்பது உணவுத் தேவைக்காக ஏனைய நாடுகளில் தங்கியிருப்பதைக் குறிக்கும்.

முதலாளித்துவத்தின் விருத்தியில் ஏற்பட்ட சந்தைப்பொருளாதார விரிவுகள் மெல்ல மெல்ல இலங்கையை பற்றிக்கொண்டது. இதனால் முதலாளி, தொழிலாளி போன்ற புதிய வர்க்கங்கள் தோற்றம் பெற்றன. அதுமட்டுமின்றி தொழிற்சாலைகள் விருத்தி கண்டன. இவற்றுடன் இணைந்து சேவைத்துறையும் வளர்ச்சிகண்டது.

ஏற்றுமதி இறக்குமதி கட்டமைப்பு விருத்தி கண்டது. இதனால் சுங்கம், போக்குவரத்து, வீதியமைப்பு விரிவாக்கம் பெற்று இவை இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய மாற்றத்தை கொண்டு வந்து சேர்த்தன. இது தன்னிறைவு பொருளாதார கட்டமைப்பிலிருந்து தங்குநிலை பொருளாதாரமாக மாற்றம் பெற்றது.

பொருளாதார மாற்றம் மட்டுமின்றி சமூக மற்றும் அரசியல் மாற்றங்களும் ஏற்பட்ட பின்னர் இவ்வரசியல் சமூக மாற்றம் பொருளாதார கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

சுமூகமானது முதலாளி,தொழிலாளி மற்றும் இவர்களுக்கு சேவை வழங்கும் நடுத்தர வர்க்கம் எனும் 3 வர்க்கம் உருவாக காரணமாக அமைந்ததுடன் இவர்களுக்கு சேவை வழங்க தொடர்புமொழியாக ஆங்கிலம் உருவாகியதுடன் காலனியாளர்களுக்கு சேவை வழங்கும் மேற்குடியினரின் உருவாக்கமும் இடம்பெறலாயிற்று.

**இலங்கையின் காலனித்துவ ஆட்சியின் அரசியல் கட்டமைப்பு :-**

1815ம் ஆண்டு கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ ராஜ சிங்கன் என்ற மன்னரிடம் ஆங்கில தேசாதிபதியுடன் ஒப்பந்தம் ஒன்றின் மூலம் ஆங்கிலேயார் இலங்கை தீவின் முழுகட்டுப்பாட்டையும் தங்களின் காட்டுப்பட்டின் கீழ் கொண்டு வந்தனர். இதனைத் தொடர்ந்து பல்வேறு விதமான சட்டங்களையும் நிருவாக முறையையும் கொண்டு வந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1833ம் ஆண்டு கோல்புறுக் அரசியால் அமைப்பு மாற்றத்தின் மூலம் இலங்கை இரட்டை நிருவாக முறையினை நீக்கம் பெற்று ஒன்றை நிருவாக கட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட்டது.

இலங்கையை 5 மாகாணங்களாக பிரித்து ஆட்சி மேற்கொண்டுவந்தனர். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்திய மாகாணங்களாக பிரித்தனர்.

1910-1912 காலப்பகுதியில் குறூ மங்கலம் அவர்களினது அரசியலமைப்பு சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டதுடன் இது 1924 ம் ஆண்டு மீள் சீர்தருத்தம் செய்யப்பட்டது

1931ம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தம் மூலம் சனநாயக கட்டமைப்பு புகுத்தப்பட்டது. குறிப்பாக 21 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் வாக்குரிமை பயன்படுத்தும் உரிமை வழங்கப்பட்டது. இதன் மூலம் சனநாயகப்பண்பாடு பேணப்பட்டது குறிப் பிடத்தக்கதாகும்.

பாராளுமன்ற கட்டமைப்பு உருவாக்கப்பட்டதுடன் முழு இலங்கைப் பொதுமக்கள் பிரதிநிதியாக (சபாநாயகர் தவிர) 57 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

காலணித்துவ ஆட்சியில் சமூக மாற்றமாக கல்வியில் மாற்றங்கள் வைத்திய வசதிகள் ஏற்படுத்தி கொடுத்ததமை, புகையிரத பாதைகள் அமைத்தல் போன்ற சமூக மாற்றங்களையும் குறிப்பிட்டுக்கூறலாம்.

எனவே, காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சார்பில் தங்குநிலை பொருளாதாரம் மற்றும் சந்தைப்பொருளாதாரம் கட்டமைப்புடன் 1948.02.04 இலங்கை அரசியல் ரீதியாக விடுதலை பெற்றது.

1948.02.04 அன்று காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற போதிலும் இலங்கை பொருளாதார ரீதியில் தங்கியிருக்கும் பொருளாதாரமாகவே காணப்பட்டது. அதாவது இலங்கை சுதந்திர மடைந்த போதிலும் பொருளாதார ரீதியில் வேறுநாடுகளைச் சார்ந்து இயங்கும் நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் இதே நிலமையை தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தொடர்ந்தமை என்பது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுதந்திரத்தின் பின் 1948-2022 - வரையான இலங்கை அரசின் பொருளாதார கொள்கைகள்**

இலங்கை பொருளாதார கொள்கையின் எடுத்துகொண்டால் அதனை அமைப்பு ரீதியாக 5 பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

» 1948- 1956- திறந்த வர்த்தகக் கொள்கை
» 1956-1965- பகுதி மூடிய பொருளாதாரம் கொள்கை.
» 1965-1970 - பகுதியளவு திறந்த பொருளாதாரக் கொள்கை
» 1970-1978 - மூடிய பொருளாதார கொள்கை.
» 1978-2022 - திறந்த பொருளாதார கொள்கை.

இலங்கையின் பொருளாதார வரலாற்றினை எடுத்து கொண்டால் ஆரம்ப காலத்தில் இலங்கை கொள்கைகள் ஏற்றுமதி இறக்குமதி போன்ற செயற்பாட்டில் அதிக பாதக விளைவுகளையே தந்தது இதன் விளைவாக ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதி செலவு அதிகமாக இருந்ததால் வர்த்தக நிலுவை எதிர்கணிய குறிகாட்டியை காட்டி நிற்கிறது.

1970-1978 ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் மூடிய பொருளாதாரம் கொள்கையினை கடைபிடித்ததன் காரணத்தினால் ஏற்றுமதியை விட இறக்குமதி மிகவும் குறைவாக காணப்பட்டது அல்லது இவற்றுக்கிடைக் கிடையே காணப்படும் இடைவெளி குறைவடைந்ததன் காரணத்தினால் வர்த்தக நிலை சாதகமாக காணப்படும் நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது. குறிப்பாக 1974ம் ஆண்டு இலங்கையில் வர்த்தக நிலுவை போர்க்கணியமாக காணப்பட்டது இதானால் வர்த்தக நிலுவையின் சாதக போக்கினால் அபிவிருத்திக்கு வேண்டிய நிதியை பெறக்கூடியதாக அமைத்தது. குறிப்பாக இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாட்டுடன் இறக்குமதி அனுமதிப்பத்திர முறை காணப்பட்டது. இவை முழுமையாக கட்டுப்படுத்த முடியாத பொருட்களிற்கு அனுமதிப்பத்திர நடைமுறை காணப்பட்டது.

1978 ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அராசாங்கம் தனது பொருளாதார கொள்கையாக "திறந்த பொருளாதார கொள்கையைக" கடைப்பிடித்தது இதற்கு அரசின் செயற்பாடுகள் தனியார்மயம், தாராளமயம் ,உலகமயம் கொள்கையினை கடைப்பிடித்தது. இதனால் இலங்கை ஏற்றுமதியை காட்டிலும் இறக்குமதியை அதிகரிக்க படுமோசமாக எதிர்கணிய வர்த்தக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலுவையை காட்டிநின்றது. இதனால் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு பணத்தினை அச்சிட்டும் உள்நாட்டு வெளிநாட்டு கடன்களை பெற்றும் நாட்டில் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டது.

இலங்கை அரசின் ஆட்சியாளர்கள் இனத்துவ அடிப்படையில் அபிவிருத்தி திட்டங்களை தேர்வு செய்து அமுல்படுத்தியதன் விளைவாக ஒருபகுதி மக்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டனர். இதனால் ஏற்பட்ட சமுக செலவுகள் மிகவும் அதிகமானது. இவை காத்திரமான பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதார நெருக்கடிக்கான மிகவும் தாக்கம் செலுத்திய காரணிகளில் பிரதானமானது உள்நாட்டு அமைதியின்மையாகும். மிகப்பெரும் பொருட்செலவில் நிகழ்த்தப்பட்ட யுத்தம் 2009ம் ஆண்டில் நிறைவு செய்யப் பட்டது. அதன் தாக்கம் யுத்தத்திற்கு செலவுசெய்யப்பட்ட அத்தனை வளங்களும் வீண்விரயமாகி எவ்விதமான பிரதிபலன் உருவாக்காது அழிவுகளை சந்தித்துள்ளது.

யுத்தத்தினால் அழிக்கப்பட்ட மனித வளம் மிகவும் பெறுமதி மிக்க ஒன்றாகும். அதுமட்டுமன்றி யுத்தத்திற்கு செய்யப்பட்ட செலவுகள் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டிருந்தால் நாட்டின் வளர்ச்சி கணக்கிட முடியாத அளவுக்கு உயர்ந்திருக்கும் மாறாக இலங்கை ஆட்சியாளர்கள் இனத்துவ சிந்தனையில் இருந்த காரணத்தினால் கட்டுக்கடங்காத அளவில் கடன்களை பெற்று யுத்தத்தில் நடத்திச்சென்று மீளமுடியாத கடன் பொறியினுள் நாட்டினை தள்ளிவிட்டனர். அதே சம காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இனத்துவ அடையாள குடியேற்ற திட்டங்கள் மூலம் தமிழர்களின் நிலங்கள் பல்வேறுமுறைகளில் கையகப்படுத்தும் உத்திகளைக்கையாண்டனர். மாகவலி அபிவிருத்தி அதிகார சபை இதற்கு சிறந்த உதாரணமாகும். அம்பாறை மாவட்டத்தில் இக்கினியாகல போன்றனவும் திருகோணமலையில் அல்லை காந்தளாய், முல்லைதீவின் கென்ட் டெலார்பாம் போன்றனவும் பெருன்பான்மை இனத்தினரை குடியேற்ற,உருவாக்கப்பட்ட நிலப்பறிப்பு திட்டங்களாகும். இவை நாட்டின் அபிவிருத்திற்கு எவ்விதத்திலும் பயன்படுத்தப்பட்டதாக தெரியவில்லை என்பது உண்மையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வளப்பயன்பாடு என்பது மிகவும் குறுகிய நோக்கத்துடன் பயன்படுத்தப்பட்டதுடன் பருவகால ரீதியாக கிடைக்கும் மழைநீர் கூட எவ்வித பயனுமின்றி கடலுடன் கலக்க செய்யப்படும் நிலை காணப்படுகின்றது. குறிப்பாக தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மூலம் கிடைக்கும் மழை நீர் இவ்வாறு வீணாக கடலுடன் கலக்க விடப்படுகின்றது. இக்காலத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு பொருளாதாரம் இழப்பினை நாடு சந்திக்கும் நிலை காணப்படுகின்றது. குறிப்பாக களுத்துறை மாவட்டம், புத்தளம் மாவட்டம், இரத்தினபுரி மாவட்டங்கள் இக்காலத்தில் பாதிக்கப்படுகின்றது. இதே சமகாலத்தில் மன்னார் தொடக்கம் பொத்துவில் வரையுள்ள தாழ்நில வரண்ட மாவட்டங்கள் கடுமையான வறட்சியையும், குடிநீர் தட்டுப்பாட்டினையும் அனுபவிக்கின்றன. இவ்வாறு மிகையாக கிடைக்கும் நீர்வளம் இப்பகுதிக்கு திசைமாற்றப்பட்டிருந்தால் அப்பகுதி விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, தொழில்துறைகள் விருத்தியாவதுடன் குறித்த மாவட்டத்தின் வெள்ள அனர்த்தம் முகாமை செய்யப்படும். இதனால் பொருளாதார இழப்பு அற்ற செழிப்பினை நோக்கி நாட்டினை இட்டுச் செல்ல முடியும். அண்மையில் இலங்கையில் பாரிய நெருக்கடிகளில் முக்கியமானது மின்சார உற்பத்தியும் விநியோகித்தலிலும் சீரற்ற தன்மையை குறிப்பிடலாம். இலங்கை ஒரு தீவு நாடாக இருப்பதும் பூகோளரீதியாக மத்தியகோட்டிற்கு அண்மையில் இருப்பதும் காற்று, சூரியஒளி, கடலலை, குப்பைகள் என்பவற்றை பயன் படுத்தி மின் உற்பத்தி செய்யும் வசதி வாய்ப்பு இருந்தும் இப் புதுபிக்க தக்க சக்தியை பயன்படுத்த ஆட்சியாளர்கள் சிந்திக்காதது இனத்துவ அடிப்படை யிலானது.

எனவே வளமுகாமைத்துவத்தில் இனத்துவ அடிப்படைவாதிகளின் செயற்பாட்டினால் இன்று மின் உற்பத்தியில் வெளிநாடுகளில் தங்கியிருக்கும் நிலைக்கு காரணமாகியது. இதனால் மின்உற்பத்திக்கு தேவையான நிலக்கரி எண்ணெய்கள் உராய்வு நீக்கிகள் மற்றும் தொழிநுட்ப தேவை என்பனவற்றை இறக்குமதி செய்வதற்கு அல்லது பெறுவதற்கு அன்னிய செலவாணி தேவைகளில் நாட்டினை தள்ளும் நிலையினை இனத்துவ ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியுள்ளனர் என்பதுவும் இவ்வாறு அனல் மின் உற்பத்தி மூலம் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் போது அது மக்கள் நலனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்பினை ஏற்படுத்தும். இதற்கு சிறந்த உதாரணம் புத்தளம் நுரைச்சோலையின் உற்பத்தி நிலையத்தினை குறிப்பிடலாம்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மிகவும் பிரதானமான காரணம் நாட்டின் வளர்ச்சிக்கு தேவையற்ற அபிவிருத்தித்திட்டங்களின் மூலம் மிகப்பெரிய பின்னடைவினை நாட்டிற்கு ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். குறிப்பாக ஏற்கனவே உள்ள துறைமுகங்கள் விமான நிலையங்கள் விளையாட்டு மைதானங்களை அபிவிருத்திச் செய்வதனை விடுத்து புதிதாக நிர்மானம் செய்வதனால் அபிவிருத்தியை அடைந்து விடுவது என்பது ஏற்கத்தக்கதன்று. குறிப்பாக இலங்கையின் துறைமுகங்கள் கொழும்பு திருகோணமலை காலி காங்கேசன் துறை பருத்தித்துறை போன்ற துறைமுகங்கள் இருக்கும் போது அவற்றினை அபிவிருத்தி செய்து பயன்படுத்தாது புதிதாக ஹம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைக்கும் தேவை ஏன் ஏற்பட்டது? விமானநிலையங்கள் கட்டுநாயக்கா திருகோணமலை மட்டக்களப்பு யாழ்ப்பாணம் இரத்மலான போன்றவற்றை அபிவிருத்தி செய்யாது மத்தளவில் அமைக்கும் தேவை ஏன் ஏற்பட்டது? இவ் விமான நிலையம் மூலம் நாட்டிற்கு கிடைத்த பயன்தான் என்ன? இலங்கையில் காணப்படும் விளையாட்டு மைதானங்கள் போதியளவில் அபிவிருத்தி செய்யாது புதிதாக விளையாட்டு மைதானம் அமைக்கும் தேவை ஏன் ஏற்பட்டது?இவை அனைத்தும் அபிவிருத்திக்கும் சந்தர்ப்ப செலவின் அடிப்படையில் நோக்கினால் நாட்டின் பொருளாதாரத்தில் எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும். இவ் அபிவிருத்தி திட்டங்கள் உள்நாட்டு வெளிநாட்டு கடன்களைப் பெற்றும் பணத்தினை அச்சடித்தும் மேற்கொள்ளப் படுவதால் நேரடியாக கடன் பொறிக்குள் நாட்டினை இட்டுச் செல்லும். இது பணவீக்க நிலையை தோற்றுவிக்கும்.

(மிகுதி அடுத்த இதழில்)

**இக்கட்டுரை கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் கோ. அமிர்தலிங்கம் PHD அவர்களால் திறனாய்வு செய்யப்பட்டதன் பின்னர் வெளியிடப்படுகிறது.**

**திரு. கிருஷ்னன் கணேசமூர்த்தி**
(BA(Econ) Hons MF. TOT-Japan PGDM(R) Eu
சமூக பொருளாதர ஆய்வாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நம் நாடும்

நம் நாடு இனவாத, மதவாத, மொழி வாத, வகுப்பு வாத பிரச்சனைகளால் நலிந்து போய்இன்று என்றுமில்லாத பொருளாத நெருக்கடிக்குள் சிக்குண்டு மீள முடியாதவாறு தத்தளிக்கிறது. இவை யெல்லாவற்றிற்கும் அடிப்படை பிரச்சனையாக இருப்பது என்ன. சிங்களவர்கள் தமிழர்கள் முஸ்லீம்கள் என பாகுபாடுகள் வளர்ந்து கொண்டே போகின்றது. இதன் விளைவையே பொருளாதார நெருக் கடிக்குள் சிக்கி நாம் அனைவரும் அனுப வித்துக் கொண்டிருக்கின்றோம். இதிலிருந்து மீள பல ஆலோசனைகள் பல்வேறு கோணத்தில் வைக்கப்படுகின்றன. இதனடிப்படை நோக்கம் பொருளாதார சிக்கலிலிருந்து மக்களை மீட்பதோடு. காலா காலாமாய் புரையோடிக் கொண்டிருக்கும் இனவாத, மொழிவாத, மதவாத பிரச்சனைகளில் இருந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வழி அமைப்பது. ஆனால் அட்சியாளர்களோ இவற்றையே ஒரு கேடயமாக பயன்படுத்தி மக்களை திசை திருப்பி தம் சொந்த நலன்களுக்காக மக்களின் நியாயமான கோரிக்கைகளை புறந்தள்ளி தம் பதவிகளை தக்க வைத்துக் கொள்கின்றனர். இவர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக படை வீரரையும் எண்ணிக்கையில் அதிகமாய் வைத்துள்ளனர். நியாயத்திற்காக நீதிக்காக, மனித நேயத்திற்காக அகிம்சை வழியில் போராடுபவர்களை அடக்கி, ஒடுக்கி, சிறையிலடைத்து அரசியல் வாதிகள் தாம் செய்வதை நியாயப்படுத்துகின்றனர். இந் நிலையில் கிறிஸ்தவர்கள் அரசியலில் ஈடுபடலாமா, அல்லது மௌனம் காத்து, விலகி நம்மை பாதுகாத்து கொள்வது முறையா?

**அன்பானவர்களே! ஓர் இனம் (Race) அதைச் சார்ந்தவர்கட்கு**

உள, உணர்வு, சமநிலை, அவரும் நம்மை போன்ற ஒருவர் நமக்கிடையில் ஒரு நல்ல தற்காப்பு நிலைமையும் உருவாக்கி, நம்மிடையே ஒன்று படக்கூடிய ஒரு கூட்டத்தார் உள்ளனர் என்ற ஒரு கூட்டுறவுப் போக்கையும் உருவாக்கி நாம் இனத்தால் ஒன்றுபட்டவர்கள் என்ற ஆழ் மன சிந்தனை நாம் ஒன்று சேர்ந்து வாழ துணைபுரிகிறது. இச் சிந்தனை அவ்வினத்தவருக்கும் பொருத்தும். ஆனால் அதேவேளை இனவெறி (Racism) என்பது கடவுளின் திட்டத்திக்கெதிரான மானிட ஒழுங்கீனம், கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட மானிடரை பிரித்து இன, மத, மொழி, சமூக, பொருளாதார ஒடுக்குதலுக்க உள்ளாக்கும் பிரிவினவாத சக்திகளுக்கு எதிராக குரல் கொடுத்து போராட வேண்டியது காலத்தின் கட்டாயம் இனவெறி மிகக் கொடியது, அதனை பூண்டோடு ஒழிக்க நம்மால் இயன்ற ஆக்க பூர்வமான வழிகளில் பங்கேற்பது நமது தலையாய கடமை. வெறித்தன்மை மலிந்த வாழ்க்கைப் பாணியில் ஜனநாயகப் பாணிக்கு இடமிராது. அதிகார வெறி பிடித்த தலைவர்களும், அவர்களுக்கு துதிபாடும் கூட்டத்தாரும் தம் சுயநல அரசியல் போங்கையே கடைப்பிடிக்க விரும்புவர். இவர்கள் பிரித்தாளும் போங்கை விட, (அதாவது பிற இனத்தவர்களுக்கு உரிய உரிமையை கொடுத்து தம்மைப் போல பிறரையும் நேசித்து வாழும் போங்கு) தவிர்த்தாளும் போங்கு மிக எளிது அதாவது முடிவெடுக்கும் பாங்கு இதில் அனைவரும்.

ஒன்றித்து தம் ஆளுமையை வெளிப்படுத்தும் நோக்கில் ஒரு சாரரை திருப்திப்படுத்தி (அதாவது பெரும்பான்மை) முடிவெடுக்கும் மனப்பாங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலா காலமாக இலங்கை அரசாட்சியில் இந்நிலையிலே காணப்படுகிறது.

எங்கே அடக்குமுறையும், ஆணவப் போக்கும் உள்ளதோ அங்கே அழிவும், அக்கிரமங்களும் பெருகி நாடு சின்னாபின்னம் ஆகி விடும். இதற்கு நம் நாடும் விதி விலக்கல்ல. எப்பொழுது எம் நாட்டில் இனவெறி கூடாது. இணக்கம் வேண்டும் என்ற குரல் அமைதியை நோக்கிய பயணம் அரம்பிக்கும்,

பூகைமையை சிலுவையினால் கொன்றழித்து, அதன் மூலம் இரு இனத்தவரையும் ஒரே உடலாக அமைத்துக் கடவுளோடு நல்லுறவு கொள்ளச் செய்வதே அவரது நோக்கமாயிருந்தது. - (எ.பே 2:16)

அடுத்த இதழில் தொடரும்...

**அருள்பணி. A.R. மகேந்திரன்.**
B.D.( Seram) MTH ( Seram)
முகாமைக்குரு,
ஜம்பட்டா வத்தளை சேகரம்.

**தொடுவானத்திற்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன**

திருமறை திருப்பணி திருச்சபை வரலாறு இறையியல் மானிட நேய மானிட பொதுமைப்பண்புகள் சார்ந்து உங்கள் ஆக்கங்கள் படைப்புக் களை தொடுவானம் இதழுக்கு அனுப்பலாம் ஆக்கங்கள் யாவும் A4 தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

அடுத்த தொடுவானம் இதழ் நத்தார் புதுவருட சிறப்பிதழாக இருப்பதினால் ஆக்கங்கள் படைப்புக்கள் இவ்விடயங்களை மையப்படுத்தி இருப்பது சிறப்பம்சமாகும்.

ஆக்கங்களை அனுப்பப வேண்டிய முகவரி

ஆசிரியர்
தொடுவானம்
மெதடிஸ்த குருமனை
மெதடிஸ்த தேவாலய வீதி
காந்தி கிராமம் சின்ன ஊறணி
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை திருச்சபை வரலாற்றில்

# தமிழ் கிறீஸ்தவ பெரியார்கள்

உலகத்திருச்சபை வரலாற்றில் திருச்சபை ஒருமைப்பாட்டிற்காய் உன்னத பணியாற்றிய இறையிலாளர்

## அருட்கலாநிதி.டி.ரி.நைல்ஸ் (டானியல் தம்பிராஜா நைல்ஸ்)

உலத்திருச்சபை வரலாற்றில் திருச்சபை ஒருமைப்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் உழைத்தவரும் கிறிஸ்தவ உலகில் தலைசிறந்த இறையியல் றிஞரும் தன்னாட்டுமயமாக்கல் சிந்தனையாளரும், புகழ்மிக்க அருளுரை ஞரும், எழுத்தாளரும் ஆசிய கிறிஸ்த மன்றத்தின் உருவாக்குனரும், உலத்திருச்சபை மாமன்றத்தின் தலைவர்களுள் ஒருவராக விளங்கியவரும், யாழ் மத்திய கல்லூரியின் சிறப்புமிக்க அதிபராகத் திகழ்ந்தவரும், இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவையின் முதலாவது தலைவராகவும், திருப்பேரவையின் இரண்டாவது தலைவராக விளங்கியவருமான அருட்கலாநிதி டி.ரி.நைல்ஸ் அவர்களின் வாழ்வையும் பணிக ளையும். சற்று மீட்டிப்பார்போமாக.



ஒருதடவை இலங்கையினை குறித்து ஓர் அறிஞர் குறிப்பிடுகின்ற போது இலங்கை இரண்டு விடயங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது ஒன்று TEA(தேயிலை) அடுத்தது D.T (D.T.நைல்ஸ்) எனக் குறிப்பிட்டார்.

**பிறப்பும் கல்வியும்**

யாழ்ப்பணம் தெல்லிப்பளையில் ஆழ்ந்த கல்விப்புலமையும் ஆழமான இறைபற்றுதியும் கொண்ட குடும்பத்திலே அன்று மாவட்ட நீதிபதியாக விளங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.வில்லியம் துரையப்பா நைல்ஸ் அவர்களுக்கும் திருமதி.இராணி முத்தம்மா நைல்ஸ் அவர்களுக்கும் 1908ம் ஆண்டு மே மாதம் 04ம் திகதி டானியல் தம்பிராஜா நைல்ஸ் அவர்கள் பிறந்தார்.

இவரருடைய குடும்பப் பின்னணியும் அதன் விசுவாவ உறுதிப்பாடும் இவர் கற்ற கல்லூரியுமே இவரை உலகில் தலை சிறந்த இறையியலாளராக பேரறிஞராக அருட்பணியாளராக உருவாக்க காரணமாக அமைந்தது.

**கல்வி**

இறைபணிக்காக இங்கு வந்த மெதடிஸ்த அருட்தொண்டர்களால் அறியாமை எனும் இருளை அகற்றி அறிவு எனும் ஒளியை ஏற்றுவதற்காய் யாழ் நகரின் மத்தியில் ஏற்றப்பட்டு இன்றுவரை மங்காது பெருந்தீபமாக சுடர் விட்டு ஒளிர்ந்து கொண்டிருப்பதும் பல அறிஞர்களையும் கல்வியலாளர்களையும் புத்தி ஜீவிகளையும் மாத்திரமல்ல பல இறைபணியாளர்களையும் உருவாக்கி உலகிற்கு உவந்தளித்த வடக்கின் மூத்த கல்லூரியான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலே இவரது பாடசாலைக்கல்வி முழுவதும் அமைந்தது இக்கல்லூரிக்கும் நைல்ஸ் பரம்பரைக்கும் நெருக்கமாக நீண்டதோர் உறவு உண்டு. இவருடைய பாட்டனார் அருட்பணி.டானியல் பூவர் நைல்ஸ் அவர்கள் இக்கல்லூரியின் முதலாவது சுதேசிய தலமையாரியராகவும் பதில் அதிபராகவும் அர்பணிப்புமிக்க சேவையாற்றியவர்.

இலங்கையில் தன்னாட்டுமயமாக்கல் சிந்தனையின் அடிப்படையில் கிறிஸ்தவ வரலாற்றில் புதியதோர் வரற்றுத் திருப்புமுனையாக கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தினை உருவாக்கிய அருட்பணி.S.S.செல்வரட்ணம் (பெரியண்ணன்) அவர்கள் யாழ் மத்திய கல்லூரியில் D.T. நைல்ஸ் அவர்களின் சகமாணவரும் உற்ற நண்பரும் ஆவார் இவர்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் யாழ் பாடசாலைகளின் கிறிஸ்தவ ஐக்கியத்திலும் அதன் செயற்பாடு களிலும் முக்கிய பங்கெடுத்து செயற்பட்டனர்.

பாடசாலைக்கல்வியினை நிறைவு செய்த D.T. நைல்ஸ் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டு அங்கு விஞ்ஞானத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டு பட்டப்படிப்பினை மேற்கொண்டார். இவர் ஒரு சட்டத்துறை வல்லுனராக வரவேண்டும் என்பது இவருடைய இலக்காக இருந்தது எனினும் இவர் ஓர் குருவானவாராக வரவேண்டுமென்பதே இவருடைய குடும்பத்தினரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிருப்பாக அமைந்தது. கொழும்பு பல்கலைக்கழகத்தில் இவருடைய ஆசிரியராக இருந்த கணிதத்துறை அறிஞர் பேராசியர்.C.சுந்தரலிங்கம் அவர்கள். (பின்நாளில் அரசியலில் மிளிர்ந்தவர்) இவரை ஒரு குருவானவராகி இறை பணியாற்றுமாறும் ஆலோசனை வழங்கி ஊக்கப்படுத்தினார் இதில் பேராசிரியர் சுந்தரலிங்கம் அவர்கள் சைவசமயத்தினைச் சேர்தவர் என்பது சிறப்பம்சமாகும்.

**குருத்துவக் கல்வியும் இறைபணியும்.**

கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பினை நிறைவு செய்த D.T. நைல்ஸ் அவர்கள். இறைபணிக்ககு தன்னை அர்பணித்து குருத்ததுவ கற்கை நெறிக்காக பெங்களுர் ஐக்கிய இறையில் கல்லூரியில் இணைந்து 1923-1933 வரை இறையியல் கல்வியை மேற்கொண்டு நிறைவாண்டுப் பரீட்சையில் முதலாம் தரத்தில் சித்தியடைந்தார்.

1933 ம் ஆண்டு ஆசியநாடுகளின் கிறிஸ்தவ மாணவர்களின் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஆசிய மகாநாடு இந்தியாவில் நடைபெற்றது இதில் கலந்து கொண்ட D.T. நைல்ஸ் அவர்களின் பேச்சுவன்மையும் அறிவாற்றலும் இதில் கலந்து கொண்ட பலரின் கவனத்தி னையும் ஈர்த்தது. 1935ம் ஆண்டு மெதடிஸ்த திருச் சபையின் திருப்பணியாளராக குருத்துவ அருட்பொழிவு பெற்றார். சிறப்பபுமிக்க திருப் பணியாள ராகவும் புகழ்மிக்க அருளுரை ஞராகவும் பருத்தித்துறை யாழ்ப்பாணம் மருதானை திருச்சபைகளின் சேகரங்களில் சிறப்பாக பணியாற்றினார்.



தன்னுடைய திருப்பணிப் பயணத்தில் ஆரம்பத்திலே திருச்சபை ஒருமைப்பாடடுப் பணிகளில் அதிக ஈடுபாட்டுடன் செற்பட்டார் எடுத்துக்காட்டாக இலங்கையில் திருச்சபை ஒருமைப்பாட்டு அமைப்புக் களான யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்திலும் இலங்கை தேசிய கிறிஸ்தவ சங்கத்திலும் பொதுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளராக சிறப்பாக பணியாற்றியது மட்டுமன்றி இலங்கை வேதாகம சங்கம் கொழும்பு. Y.M.C.A. என்பவற்றின் இயக்குனராகவும் சிறப்பாக பணியாற்றினார்.

**தன்னாட்டுமயமாக்கல் பணியில்....**

கிறிஸ்த மார்க்கம் மேலைத்தேயத்திற்கு உரியது அல்ல கீழைத்தேயத்திற்கே உரித்தான மார்க்கம் என உறுதியாக வலியுறுத்தினார் "கிறிஸ்தவ மார்க்கம் மேலைத்தேயம் எனும் பூச்சாடியில் உள்ள செடியாக உள்ளது" அது செழித்து வளரவேண்டுமானால் இம் மண்ணில் நடப்பட வேண்டும் என வலியுறுத்தி அதற்கான செயற்பாடுகளில் அயராது பாடுபட்டு பல செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

இதன் முக்கிய அம்சமாக இவரின் ஆருயிர் நண்பண் அருட்பணி. S.S.செல்வரட்ணம் (பெரியண்ணன்) தன்னாட்டு மயமாக்கல் சிந்தனையின் செயல்வடிவமாக 1939ல் மருதார் மடத்தில் கிறிஸ்த சேவா ஆச்சிரமத்தினை நிறுவியபோது அவருடைய அத்தனை செற்பாடுகளுக்கும் முயற்சிகளுக்கும் உடன் இணைந்து தோழோடு தோழ் நின்று செயலாற்றியவர் D.T. நைல்ஸ் ஆவார் இதனால் இவரை ஆச்சிரமத் திருப்பணியின் இணை உருவாக்கினர் (Co Founder) என்றால் மிகையாகாது.

**திருச்சபை ஒருமைப்பாட்டுப்பணியில்**

கிறிஸ்தவ திருச்சபைகள் ஒருங்கிணைந்து திருப்பணியாற்ற வேண்டு மென்பதில் D.T. நைல்ஸ் அதீத அக்கறையுடையவராக இருந்தார் இதற்காக ஆசிய ரீதியிலும் அகில உலக ரீதியிலும் அயராது பாடுபட்டார் இதன் பாலாக பல கருத்தரங்குகள் செயலமர்வுளில் பங்கு பற்றியது மாத்திரமன்றி கருத்தரங்குகள் செயலமர்வுகளை ஒழுங்கமைத்தார் எடுத்துக்காட்டாக 1938ல் சர்வதேச திருத் தொண்டர்களின் மகாநாடு தாம்பரத்தில் நடைபெற்றபோது இதில் கலந்து சிறப்பு சொற்பொழிவாற்றினார் இம் மகாநாட்டில் பங்குபற்றிய வர்களில் மிகவும் வயதில் குறைவானவராக இவர்விளங்கினார் ஆசிய மட்டத்தில் இவரின் அயராத முயற்சியினால் ஆசிய திருச்சபைகளை இணைத்து 1957 ம் ஆண்டு கிழக்காசிய கிறிஸ்தவ சம்மேளனத்தை உருவாக்கினார் இதுவே இன்று ஆசிய கிறிஸ்தவ மன்றமாக நற்பணியாற்றி வருகிறது இதன் பொதுச் செயலாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957 தொடக்கம் 1968 வரையிலும் தலைவராக 1969 தொடக்கம் 1970 வரை பணியாற்றினார்.

உலகளாவிய மட்டத்தில் திருச்சபை ஒருமைப்பாட்டிற்கான பல முயற்சிகளை மேற்கொண்டார் இதற்காக உலக திருச்சபை ஒருமைப்பாட்டு இயக்கம் ஒன்றினை உருவாக்க உலக கிறிஸ்தவ தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டார். எடுத்துக்காட்டாக பேராயர் வில்லியம் ரெம்பிள், கலாநிதி. நொதன் சொடர்புலம் திரு J.R.மொட் போன்றோரைக் குறிப்பிடலாம் இம் முயற்சிக்கு இரண்டாம் உலக போர் தாமத்தினை ஏற்படுத்தினாலும்.உலகத் திருச்சபை வரலாற்றில் ஓர் மைல் கல்லாக 1948 ம் ஆண்டு உலகத்திருச்சபை மாமன்றம் (W.C.C) உதயமாகியது. இம் மாமன்றத்தின் முதலாவலு தொடக்க நிகழ்வு அம்ஸ்டர்டாமில் நடை பெற்றபோது இவரே தொடக்க சொற்பொழிவாற்றினார் இதன் இரண்டாவது மகாநாடு 1954ல் அமெரிக்காவில் நடைபெற்றபோது சிறப்பு சொற்பொழிவாளராக அழைக்கப்பட்டார்.இம்மாமன்றத்தின் அனைத்துலக வாலிபர் பணித் தலைவராக 1960-1965 வரை பணியாற்றினார். 1968 ல் இம்மன்றத்தின் நான்காவது மகாநாடு சுவீடனில் நடைபெற்றபோது இம்மாநாட்டின் பிரதம சொற்பொழிவாளராக அழைக்கப்பட்டிருந்த கலாநிதி. மாட்டின் லூதர் கிங் அவர்கள் படுகொலை செய்யப்பட்டமையினால். அருட் கலாநிதி D.T.நைலஸ் அவர்களே இம் மகாநாட்டிலும் பிரதம சொற்பொழிவாளராக விளங்கினார். தொடர்ந்தும் 1968 ல் இம் மன்றத்தின் ஏழு தலைவர்களுள் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இறக்கும்வரை பணியாற்றினார். இவர் உககளாவிய மட்டத்தில் மகாநாடுகள் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளும் போதேல்லாம் இலங்கையில் தமிழினத்துக்கு எதிராக நடாத்தப்படும் அநீதியை ஒடுக்குமுறையினை வன்கொடுமையினை இடித்துரைத்தவர் வெளியுலகிற்கு கொண்டுசென்றவர். சமயவழியூடாக சமுக நீதி தேடியவர்.

இறையிலாக்கப்பணிகளில்..... தன்னாட்மயமாக்கல் சிந்தனையின் அடிப்படையில் சூழல் சார் இறையியல் உருவாக்கம் பெறவேண்டு மென்பதற்காகவும் உலகில் மாற்றங்களுக்கும் விளைவுகளுக்கும் முகம்கொடுத்து கிறிஸ்தவ திருச்சபை எவ்வாறு திருப்பணியினை ஆற்றவேண்டும் என்பற்கு அடிப்படையாக யாழ் உடுவிலில் இறையியல் மகாநாட்டினை யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின்னூடாக 1944 முதல் ஒழுங்கமைத்து நடாத்தினார் இம் மகாநாடானது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை காலச்சூழலுக்கு பொருத்தமான கருப்பொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடன் இரண்டு வாரங்கள் நடாத்தத்பட்டது இம்மகாநாட்டில் உலகப் புகழ் பெற்ற இறையியலறிஞர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். திருமறையினை சமகாலச் சூழலுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யவும் மாறிவரும் உலக ஒழுங்கிற்கேற்ப கிறிஸ்தவ இறையிலாக்கத்தினை மேற்கொள்ளவும் உலகில் பல்வேறுபட்ட சூழலில் வாழும் இறையியல் வல்லுனர்களின் கற்பித் தலைப் பெற்றுக்கொள்ளவும் வளர்ந்து வரும் கிறிஸ்தவ சமுகத்தின் இறையியல் சிந்தனை வளர்ச்சிக்கு இம் மகாநாடுகள் பெரும் பங்காற்றியது. இவர் பல இறையியல் நூல்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டார்.

**யாழ் மத்திய கல்லூரி அதிபராக....**

ஓர் உலகப் புகழ் பெற்ற பேரறிஞராக கல்லூரியின் முதல் சுதேசிய பழையமாணவ குருத்துவ அதிபர் என்கின்ற தனிச்சிறப்புடன் தனது கல்லூரியான யாழ் மத்திய கல்லூரி அதிபராக 1955 ம் ஆண்டு அதிபராகப் பதவியேற்றார் இவரின் காலம் கல்லூரியின் பொற்காலம் எனலாம். கல்லூரியின் வளர்ச்சியில் அரும்பாடுபட்டு உழைத்தார் இவர் கடுமையான கண்டிப்பும் சிறந்த ஒழுக்கக் கட்டுக்கோப்பும் மிக்க அதிபராகத் திகழ்ந்தார் என இவரின் காலத்தில் கற்றவர்கள் இன்றும் நினைவு கூருகின்றனர். இவரின் காலத்தில் சிறப்பம்சமாக விளையாட்டுத்துறைக்கு மிகப்புகழ் பெற்ற கல்லுரியான இக்கல்லூரியில் முதல் முதல் உள்ளக விளையாட்டினை (Indoor Games) அறிமுகம் செய்து வைத்தார். அத்துடன் கல்லூரியின் நூற்றி இருபத்தி ஐந்தாவது ஆண்டு நிறைவு நிகழ்வை மிகவும் சிறப்பாகவும் கருத்துமிக்கதாகவும் ஒழுங்கமைத்து நடாத்தினார். 125 ம் ஆண்டின் நினைவாக வகுப்பறைகள் கொண்ட நிணைவுகட்டடத்தினை நிர்மாணித்து திறந்துவைத்தோடு கல்லூரியின் ஆரம்ப பிரிவு கடட்டத்திற்கு றொக்வூட் இல்லம் எனப் பெயரிட்டார். இவ்வாறு மிகச்சிறப்பாக அதிபராக 1962 வரை பணியாற்றினார்.

**இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவராக.....**

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடகிழக்கு திருமாவட்ட அவையின் முதலாவது தலைவராக தெரிவு செய்யப்பட்டு மிகச்சிறப்பாக 1964 –1968 வரை பணியாற்றினார். இக்காலப்பகுதியில் திருச்சபையின் வழிபாட்டு ஒழுங்கினை தமிழில் வடிவமைத்தும் தமிழ் கிறிஸ்தவ கீர்த்தனைகள் அடங்கிய பாடல் புத்தகத்தினையும் வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1968 ம் ஆண்டு இலங்கை மெதடிஸ்த திருச்சபை பேராயராக (தலைவராக0 தெரிவுசெய்யப்பட்டார் இக்காலப்பகுதியில் திருச்சபைக்குள் இறையியல் கல்வி தன்னாட்டு இறையிலாக்க சிந்தனை திருச்சபைகளின் ஐக்கியத்திற்காகன முயற்சிகள் திருச்சபையினை சுதேசியமயப்படுத்தல் சமயவழியூடாக சமுக நீதி என்பவற்றினை முன்னிறுத்தி பணியாற்றினார்.

அருட்கலாநிதி.டி.ரி.நைல்ஸ் அவர்களுக்கு இரண்டு புதல்வர்கள் இருவருமே தந்தையினைப்போல இறைபணிக்காக தம்மை அர்பணித்தனர் மூத்த மகன் இறையியலாளர் அருட்பணி பிறேமன் நைல்ஸ் அவர்கள் பிறஸ்பிற்ரேறியன் திருச்சபையில் அருட்பணியாளராகி ஆரம்பத்தில் இலங்கை இறையியல் கல்லூரி பிலிமத்தலாவையில் விரிவுரையாளராகப்பணியாற்றி பின்னர் ஆசிய கிறிஸ்தவ மன்றம் உலக திருச்சபை மாமன்றம் என்பவற்றில் திருச்சபை ஒருமைப்பாடு பல்சமய உரையாடல் பணிகளில் சிறப்பாக செயலாற்றி பல நூல்களையும் எழுதியுள்ளார் இவர் தற்போது அமெரிக்காவில் வசித்துவருகிறார்.

இளைய மகன் அருட்பணி.தயாளன் நைல்ஸ் அவர்கள் இலங்கை மெதடிஸ்த திருச்சபையில் அருட்பணியாராகி இலங்கையில் சிறப்பாக திருப்பணியாற்றி பின்னர் அமெரிக்காவிற்கு சென்று திருப்பணியாற்றிக் கொண்டிருக்கையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு 1992ல் காலமானார்.

**மறுமைக்குள் அழைப்பு**

1970ம் ஆண்டளவில் அருட்கலாநிதி D.T.நைலஸ் அவர்கள் புற்று நோய்க்களானார் இக்காலப்பகுதியில் வேலூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையின்போது தான் இறக்க நேரிட்டால் தன்னுடைய உடலை இலங்கைக்கு எடுத்துச் செல்லவேண்டாம் வேலூரிலே அடக்கம் செய்யவேண்டும் எனக் கூறியிருந்தார். 1970 ம் ஆண்டு யூலை மாதம் 17ம் திகதி இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து இறையுடன் இரண்டறக்கலந்தார். இவரின் விருப்படியே இவரது உடல் வேலூரில் விதைக்கப்பட்டது. இவரது கல்லறையில். திருப்பாடல்கள் 122:1.வசனமாகிய ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம் என்ற அழைப்பை நான் கேட்டபோது அகமகிழ்ந்தேன் எனும் திருவாசகம் இன்றும் மிளிர்ந்துகொண்டிருக்கிறது.

**- அருட்பணி.கந்தையா ஜெகதாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைப்பொழிவினைத்

## தற்காலச் சூழ்நிலையில் புரிந்து கொள்ளுதல்.

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து திரளான ஜனங்களைக் கண்டு மலையின் மீது ஏறி அமர்ந்தபோது தமது வாயைத் திறந்து உபதேசித்த வார்த்தைகளாக மலைப்பொழிவினைத் திருமறையில் காண்கின்றோம். இதனை மலைப்பிரசங்கம், பாக்கிய வசனங்கள் போன்ற பெயர்களினால் அழைக்கின்றோம். இதனை மத்தேய சுவிஷேத்தில் 05 : 3-12

வசனங்களிலும், லூக்கா 06 : 20-26 வசனங்களிலும் காண்கின்றோம். ஆனால் மத்தேயு இதனைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். விசுவாச வாழ்க்கையில் நாம் எவற்றைச் செய்தால் எவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றி அல்லது இறை அரசின் பிள்ளைகளாவதற்கு நாம் எவற்றை எல்லாம் பூவுல வாழ்க்கையிலே செய்ய வேண்டும் என்பது பற்றிய விடயங்களை மலைப் பொழிவிலே காண்கின்றோம்.மலைப்பொழிவானது மனித சமுதாயத்திற்குக் கொடுக்கப்பட்ட நல்ல செய்தியாகக் காணப்படுவதுடன் இயேசுவினால் முன்வைக்கப்பட்ட நல்ல ஆலோசனையாகவும் காணப்படுகின்றது.

மலைப்பொழிவு என்னும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் புனித அகஸ்டின் என்பவராவார். பேறுபெற்றவர்கள் என்பது கிரேக்கமொழியில் Makarios எனப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள், ஆசீர்வாதம், மகிழ்ச்சி, அதிர்ஸ்டசாலிகள் என்பதாகும். இது **You diemoniya** எனக் குறிப்பிடப்படுகின்றது. இதன்பொருள், சகல ஆஸ்திகளுடனும் அமைந்த வாழ்க்கை என்பதாகும். இயேசு அலகையினால் சோதிக்கப்பட்ட பின்னர் இடம் பெற்ற சம்பவமாக மத்தேயு சுவிசேஷத்தில் மலைப்பொழிவு காணப்படுகின்றது. இயேசுவின் மலைப் பொழிவிற்கும் மோசேயின் பத்துக் கட்டளைகளிற் கிடையேயும் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் காணப்படுகின்றன. பத்துக் கட்டளைகளின் போது மோமாசே மலையின் மீது இருந்தார், நாற்பது வருடங்களாக சோதனைகளின் மத்தியில் இஸ்ரவேலர்களை வழிநடத்தினார். இயேசுவும் மலைப்பொழிவின் போது மலை மீது இருந்தார். அலகையினால் நாற்பது நாட்கள் சோதிக்கப்பட்டார். இருவரும் சோதனைகளில் இருந்து தப்பித்துக் கொண்டவர்கள். இவைகள் ஒற்றுமைகளாகும். வேற்றுமைகளாக, மோசேயின் பத்துக் கட்டளைகளின் போது அங்கு அவர் தனித்திருந்தார். நெருப்பு, புகை, இடி, மின்னல் போன்றவைகள் நிகழ்கின்றன. ஆனால் இயேசுவின் மலைப்பொழிவின் போது அமைதி காணப்பட்டதுடன் திரளான ஜனக்கூட்டம் அவரைச் சூழ்ந்திருந்தது.இவைகள் வேறுபாடுகளாகக் காணப்படுகின்றன. மோசேயுடன் இயேசு வை ஒப்பிடும் போது உபாகமம் 18: 18 இல் இறைவாக்கினரை எழுப்புவேன் எனக் கூறப்படுவதைக் காணலாம். இதன்படி ஓர் நற்செய்தியா? அல்லது சட்ட வரைபா? என்பது பற்றி பலவிமர்சனங்களுண்டு.

மலைப்பொழிவு பற்றி **Joachinjermiah** என்பவர் **Sermon on the mount** என்னும் நூலில் குறிப்பிடும் போது மலைப் பொழிவானது நற்செய்தி என்னும் பாணியிலேயே பார்க்கப்படல் வேண்டும் எனக் கூறுகின்றார். ஆனால் **James boice** என்பவர் எல்லோருக்கும் புதிய வாழ்வைக் கொடுப்பதற்கான சட்டவரைபாகப் பார்க்கப்படல் வேண்டும் என்கிறார். ஏனெனில் மத'தேயு 05 : 17 இல் கூறப்படுகின்றதன்படி, நியாயப் பிரமாணங்களை நிறைவேற்றுவதற்கே வந்தேன் எனக் குறிப்பிடப்படுகின்றது. **M. Luther** மலைப்பொழிவு பற்றிக் கூறுகையில், மலைப்பொழிவு என்னும் தெய்வீகக் கண்ணாடியில் இறை அருளின் கிருபையை இயேசுவின் மூலம் பெற்றுக் கொள்கின்றோம் எனக்கூறுகின்றார். ஜேர்மன் நாட்டு இறையியலாளரான **D. Bonhoeffer** மலைப்பொழிவு பற்றிக் கூறுகையில் கடவுளின் கிருபையை இயேசுவின் மூலம் பெற்றுக் கொள்கின்றோம். என்றும் அதற்காக நாம் மாற்றமேற்படுத்தும் சீடர்களாக மாற வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். **H. D.Betz** என்பவர் மலைப்பொழிவு பற்றிக் குறிப்பிடுகையில் மலைப்பொழிவு என்பது வெறுமனே ஒரு சட்டமல்ல அது இறையியல் அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சார்ந்த கருத்தைக் கொண்டது. அதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்கின்றார்.

மத்தேயு நற்செய்தி நூலில் விண்ணரசு என்னும் சொல் 29 தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணரசு என்பது பற்றி அறிய முற்படுகையில் விண்ணரசானது ஏற்கனவே வந்து விட்டதென்றும், வரவிருக்கும் பாக்கிய வசனங்கள் பற்றி வரலாற்று ரீதியாக நோக்குகையில் கத்தோலிக்கத் திருச்சபையானது இதனை மத்திய காலஅறவியல் கருத்துக்களாகக் காட்டுகின்றன. ஏனைய திருச்சபைகள் மலைப்பொழிவு பற்றிக் கூறுகையில் Anabaptist உடன் ஏனையவர்களும் குறிப்படுகையில் நற்செய்திகளானது கட்டளைகளாகத் தரப்படுகின்ற அதே வேளை ஆவியில் எளிமையுள்ளவர்கள் பற்றியும் குறிப்பிடுகின்றன.

தற்காலச் சூழ்நிலையில் மலைப்பொழிவினை நோக்குகையில் இவ்வுலகில் நாம் செய்ய வேண்டிய எட்டு விடயங்கள் பற்றியும் அதன் கைம்மாறுகளாகக் கிடைக்கும் ஒன்பது பிரதிபலன்கள் பற்றிக் கூறுகின்றது. ஆவியில் எளிமையுள்ளவர்களுக்கு பரலோக இராச்சியம் கிடைக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் இன்றைய சமுதாயக் கிறிஸ்தவவாழ்வில் எளிமைத் தன்மையைக் காண முடியவில்லை எனவே எப்படி நாம் தேவ இராட்சியத்திற்குரியவர்களாகக் காணப்படக் கூடும் என்னும் வினா எழுகின்றது. இவ்வுலக வாழ்வில் துயரம் அனுபவிப்பவர்கள் பற்றிக் கூறுகையில், அவர்கள் ஆறுதலடைவதாக் கூறப்படுகின்றது. ஆனால் இன்றைய சமுதாயம் துயரமின்றி வாழும் வாழ்வினையே எதிர்பார்த்து நிற்கின்றது. எனவே இவர்களின் வாழ்வில் ஆறுதல் காணப்படுவது கடினமானதாகவே காணப்படுகின்றது. சமகால மனித சமுதாயத்தில் சாந்த குணமுள்ளவர்களைக் காண்பது அரிதாகவே உள்ளது. எங்கு பார்த்தாலும் கொலைகளும் வெறிகளுமே காணப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் இவர்கள் எப்படிப் பூமியைச் சுதந்தரிக்க முடியும்? இன்று எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி என்று தேடி அலைய வேண்டிய நிலையிலேயே மனிதன் காணப்படுகின்றான். காரணம் நீதிசெறியானது நாட்டை விட்டு நீங்கிப் போயுள்ளதையே காண முடிகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் வாழ்க்கையில் எப்படித் திருப்தி காணப்படக்கூடும்? இரக்கம் காண்பிக்கும் மனோநிலையினையும் இன்றைய மனித சமுதாயத்தில் காணமுடியவில்லை. எனவே கடவுளின் இரக்கத்தை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும் என்னும் வினாவும் எழுகின்றது. அதே போன்று இருதய சிந்தனையில் சுத்தமுள்ளவர்களையும் இன்றைய சமுதாயத்தில் காணமுடியவில்லை. இதன் காரணத்தினால் தேவனுடையதரிசனத்தையும் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்மால் காணமுடியவில்லை என்பதே உண்மையாகும்.

இன்றைய உலகமானது இரண்டு மாபெரும் உலகயுத்தங்களைச் சந்தித்துள்ளது. இதன்விளைவாக உலகமானது சமாதானத்தைத் தேடி அலைவதைக் காண்கின்றோம். இன்றைய கிறிஸ்தவர்களாகிய நாம் கடவுளின் பிள்ளைகள் என எம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு ஆர்வமாயுள்ளோம். அதற்கு கடவுளின் போதனைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். கடவுளினுடைய பிள்ளைகளாகக் காணப்பட வேண்டுமேயாயின், அது சமாதானம் பண்ணுகின்றவர்களுக்கே கொடுக்கப்படுகின்ற ஒரு கொடை என்பது மலைப்பொழிவின் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது. எனவே இன்றைய உலகில் அவசியமாகவும், அவசரமாகவும் பேணப்பட வேண்டிய சமாதானத்தை கடவுளுடைய பிள்ளைகளாக இருக்கின்ற நாம் உலகளாவிய ரீதியிலான சமாதானத்தை ஏற்படுத்திக் கடவுளின் பிள்கைளாக வாழ்வதற்கு மலைப்பொழிவினை எமது வாழ்வில் கடைப்பிடிப்போமாக.

**கு. குணறுபேஸ்**
உள்ளூர் அருளுரையாளர்
BA.MA.M.Phil. (RED)
கோட்டமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடல் பிறந்த கதை

(சென்ற இதழின் தொடர்ச்சி)

திருச்சபையிலே நாம் பாடும் பாடல்கள் ஒவ்வொன்றும் அவை எழுதப்பட்ட அல்லது பாடப்பட்ட தருணங்களை அறிந்து கொள்ளும் போது புதிய உற்சாகத்தையும் இன்னும் ஆழமான பக்தி விருத்தியையும் நமக்குள் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

நமது மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த கே.எஸ்.அருள்ராஜா அவர்கள் கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது தொழில் நிமித்தம் மிகவும் பின் தங்கிய காட்டுப் பிரதேசங்களில் பணியாற்றியவர்.

ஒருமுறை அவரது மூத்த புதல்வருக்கு ஆபத்தான ஒரு நோய் ஏற்பட்டது. வாகன வசதியோ வேறு வசதியோ குழந்தையை வைத்திய சாலைக்குக் கொண்டு போக இருக்கவில்லை. அவரோ தூரத்தில் இருந்தார். அப்போது அவர் முழுங்காலில் நின்று இறைவனை நோக்கி மன்றாடினார்.

அவர் பாடக்கூடியவராகவும் பாடல் எழுதுவதில் ஆர்வமுள்ளவராகவும் இருந்தபடியினால் அவரது ஜெபமானது பாடலாக உருவெடுத்தது.

ஆண்டவர் இயேசுவை அழைத்து தனது மகன் சுகமாகவேண்டும் என்ற நூற்றுவர் தலைவனின் கதை நினைவுக்கு வந்தது.

ஆயினும் அவரது நம்பிக்கை இன்னும் முன்னேறியதாக தனது மகன் பூரண சுகமடைவான் என்ற நிச்சயத்தைக் கொண்டவராகவும் அங்கேயே இயேசு இருக்கிறார் என்ற தெளிவோடும் "இங்கிருந்தே மொழியும் என் புதல்வன் சுகமடைவான்." என்ற வரிகள் விசுவாசியின் நம்பிக்கை எப்படியிருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

"ஐயா இந்த தூரம் என்னை நேசிக்கிறீரா நேசிக்கிறீரா?" இந்த பாடலை அவர்பாடும் போது கேட்ட நினைவுகள் இன்னும் மாறவில்லை.

(கிறிஸ்த பாமாலை - பாடல் இலக்கம் 402)

(தொடரும்)

அருள்கலாநிதி. K.J. அருள்ராஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட் திரு. J.W.யோகராஜா

## REV. JOSEPH WILLIAM YOGARAJAH



அருட்திரு.J.W.யோகராஜ் அவர்கள் திரு.திருமதி.யோசுவா அவர்களுக்கு ஒரே புதல்வனாக 1954ஆம் ஆண்டு மார்ச் 8ம் திகதி வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபையில் ஞானஸ்தானம் பெற்ற முழு அங்கத்தவராக விளங்கியவர். இவர் வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபையின் பாடகர் குழுவின் அங்கத்தவராகவும் விளங்கினார். யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்றார். இவர் தென்னிந்திய சபையில் ஊழியனாக வருவதற்கு விண்ணப்பித்தும் சமூக அடிப்படையில் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. 1974இல் வண்ணார்ப்பண்ணை மெதடிஸ்த ஆலய பராமரிப்பாளராக அன்றைய வண்ணார்ப் பண்ணை குருவாக அருட்திரு.K.T.முத்தையாவினால் நியமிக்கப்பட்டார். இதன் பின் 1975-1979 அச்செழு திருச்சபையில் உள்ளூர் அருளுரையாளராக (Local Worker) பணியாற்றினார். இக்காலத்தில் 1979இல் யாழ்.சேகர முகாமைக்குரு வெஸ்லி அரியராஜாவினால் குருத்துவ மாணவராக தெரிவு செய்யப்பட்டார். 1981 இல் பிலிமத்தலாவ இறையியற் கல்லூரி குருத்துவ மாணவனானார். இவர் கண்டுக்குளி பரியோவான் ஆலயத்தைச் சேர்ந்த திரு.யோசப் பென்ஜமின் அவர்களின் மகளாக திவ்யம் அவர்களை திருமணம் செய்தார். 1980இல் Joy என்ற மகன் பிறந்தார். 1983இல் பிலிமத்தலாவ குருத்துவ மாணவராக விருந்தபோது இனக்கலவரத்தில் கஷ்டத்தின் மத்தியில் கல்வி பயின்ற அவர் 1984இல் B.th(2nd Class) தேர்ச்சியடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984 ஆம் ஆண்டு திருக்கோயில் சேகரத்திலுள்ள கோமாரி சபைக்கு குருவானவானவராக நியமிக்கப்பட்டார். 1985 அடுத்த J.W.யோகராஜா திருக்கோயில் சேகர முகாமைக் குருவாக நியமிக்கப்பட்டார்.

1985-1988 வரை திருக்கோயில் சேகர முகாமைக்குருவாக விளங்கியவர். 1989ஆம் ஆண்டு பருத்தித்துறை திருச்சபைக்கு குருவானவராக நியமிக்கப் பட்டார்.

1994 ஆம் ஆண்டு அன்றைய மெதடிஸ்த திருச்சபை தலைவர் K.T.முத்தையா, J.W. யோகராஜா அவர்களை கிளிநொச்சி, வன்னி நவஜீவனத்தி லிருந்து வன்னி மிஷன் ஆரம்பிக்கும்படி அழைத்திருந்தார். அக்காலப்பகுதியில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபடியால் வன்னி மிஷனை ஆரம்பிக்க முடியவில்லை. 1995ஆம் ஆண்டு "சூரியகதிர்" இராணுவ நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டமையாலும் அவர் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து அவரது சகலன் அருட்பணி.A.K.செல்வநாயகம் பணியாற்றிய ஜெயபுரம் தென்னிந்திய திருச்சபையின் குடும்பத்தினருடன் அகதியாக தங்கினார். 1997 ஆம் ஆண்டு அச்செழு சபைக்கு உள்ளூர் பணியாளராக நியமிக்கப்பட்டார். அச்செழுவில் சிறப்பாக துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து சிறப்பாக நற்செய்தி பணியாற்றியவர். 2000 ஆம் ஆண்டு புத்தூர் பரி.லூக்கா மெதடிஸ்த ஆலயத்தில் நற்செய்திப் பணியாற்ற அனுப்பப்பட்டார். அங்கிருக்கும் போது புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் தொண்டர் ஆசிரியராக கிறிஸ்தவத்தை கற்பித்தார். 2001 ஆம் ஆண்டு மெதடிஸ்த திருப்பேரவையால் மீண்டும் குருவானவராக உள்வாங்கப்பட்டார். 1989 இல் யாழ்.சேகர முகாமைக்கு குருவானவராக பணியாற்றிய அருட்திரு.K.கருணசேகர ஜெனிவாவுக்கு மேற்படிப்புக்காக சென்ற போது அருட்திரு.J.W.யோகராஜாவே யாழ்.சேகர குருவாக பணியாற்றினார். 2002 ஜனவரி மாதம் ஹற்றன் சேகரத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அக்காலத்தில் A-9 நெடுஞ்சாலை மூடப்பட்டிருந் தமையால் கப்பலில் தான் திருகோணமலை சென்று அங்கிருந்து ஹற்றன் சென்றடைந்தார். ஹற்றன் சேகரத்தில் தோட்டத்தொழிலாளர் மத்தியில் சிறப்பாக பணியாற்றினார். ஹற்றனிலிருந்து கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த திருச்சபைக்கு தமிழ் குருவானவராக நியமிக்கப்பட்டார். அத்துடன் மருதானை திருச்சபையி னதும் தமிழ் திருப்பணிக்கு குருவானவரானார். அங்கு சபையார் சந்திப்புக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த முறையில் ஆற்றினார். 2010 வரை கொழும்பில் திருப்பணியாற்றிய பின்பு 2011 இல் கல்முனை சேகரத்திற்கு முகாமைக்குருவாக இடமாற்றம் பெற்றார். இவர் வாலிபர்களுடனும் பொதுமக்களுடனும் நெருக்கமான உறவைப் பேணியவர். 2015வரை கல்முனையில் பணியாற்றிய பின் 2016இல் புளியந்தீவு சேகரத்திற்கு முகாமைக்குருவாக நியமிக்கப்பட்டார். இவர் பலரை குருத்துவ மாணவர்களாகவும் உள்ளூர் அருளுரையாளராகவும் கற்க அனுப்பியவர். 2020 டிசம்பர் வரை புளியந்தீவில் முகாமைக்குருவாக பணி யாற்றியவர். கல்குடா நற்செய்திப்பணி கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டவர். திடீரென நோய்வாய்ப்பட்ட இவர் 07.03.2021 கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவரது இறுதி ஆராதனை புளியந்தீவு ஆலயத்திலும் நடைபெற்று பூதவுடல் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு Trimmer மண்டபத்தில் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டு வட்டுக்கோட்டையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமாவட்ட அவைச் செய்திகள்

வடக்கு கிழக்கு திருமாவட்ட அவையின் 59 ஆவது வருடாந்த கூட்டத்தொடர் யூன் மாதம் 17ம் 18 ம் திகதிகளில் "மீண்டெழுவோம்" எனும் தொனிப்பொருளில் திருக்கோவில் மெதடிஸ்த ஆலயத்தில் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர் அருள்கலாநிதி.கே.ஜே. அருள்ராஜா போதகரின் தலமையில் நடைபெற்றது. நாட்டின் சூழ்நிலையினால் கடந்தவருடம் நேரிடை கூட்டத் தொடராக இல்லாமல் சூம் செயலியூடாக நடைபெற்றது. எனவே இம்முறை நேரிடையாக நடைபெற்றதால் இரண்டு வருடங்களின் பின்னர் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவை உறுப்பினர்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கவும் மகிழ்வையும் ஐக்கியத்தையும் பரிமாறிக் கொள்ள உதவியதோடு புதிய உத்வேகத்துடனும் நம்பிக்கையுடனும் திருப்பணிகளை சூழ்நிலைக்கேற்ப திட்டமிட உந்துசக்தியாக அமைந்தது.

தொடக்க நாளில் 17ம் திகதி காலை குருமார் அவையும் மாலை 4.00 மணிக்கு பொது அவையும் இடம் பெற்றது அதில் திருமாவட்ட தலைவரின் உரையும் திருப்பேரவைத்லைவரின் உரையும் இடம் பெற்றது. இவற்றில் சிறப்பம்சமாக இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் சீடராகுவோம் சீடராக்கு வோம் எனும் கருப்பொருளிலான 2021 தொடக்கம் 2027 வரையான தொலை நோக்கும் திருப்பணி இலக்கும் அதற்கான மூலலோபாய திருப்பணி நோக்கு பற்றிய விளக்கவுரை திருப்பேரவைத் தலைவரால் வழங்கப்பட்டு இவ்விடயம் தொடர்பான கருத்துப்பரிமாற்றங்கள் இடம் பெற்றன.

## திருமாவட்டஅவையின் புதிய பணி நியமனங்கள்

திருமாவட்ட அவையின் வாலிபர் பணி புதிய செயலாளராக மன்னார் முருங்கன் சேகரத்தினை சேர்ந்த திரு.யூட்சன் ஜோசுவா வாலிபர் பணி திருப்பணியாளராக அருள்பணி.K.ஸ்பன் நிசாந்தன் அவர்களும் பெண்கள் பணி செயலாளராக. வடக்கிற்கு யாழ் சேகரத்தினை சேர்ந்த திருமதி.சுகந்தி நயில்ஸ் அவர்களும், கிழக்கிற்கு கல்லாறு சேகரத்தினைச் சேர்ந்த திருமதி. S.ரதிகலா அவர்களும் திருமாவட்ட அவையின் சமுதாயப்பணியின் புதிய செயலாளராக.கோட்டமுனை சேகரத்தினைச் சேர்ந்த திரு.S.சசிகரன் அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமனம் பெற்றுள்ளனர் இவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இவர்களின் பணிக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**நன்றிகள்**

கடந்த காலங்களில் திருமாவட்ட அவையின் பணிகளுக்கு செயலார்களாக சிறப்பாக பணியாற்றிய அருள்பணி.T.R.அருன்புஸ்பராஜ் (வாலிபர் திருப்பணி) திரு.J.ஜெசி பிரதிக்ஷனன்(வாலிபர்பணி) திருமதி. புஸ்பலதா தனேஸ்வரன்(பெண்கள் பணி) திரு.G.தயாபரன் நைல்ஸ் (சமுதாய பணி) ஆகியேருக்கு எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**திருப்பேரவை செய்திகள்**

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வருடாந்த திருப்பேரவைக் கூட்டத்தொடர் ஆகஸ்ட் மாதம் 18-21 வரை கொழும்பு மெதடிஸ்த தலமையக வளாகத்தினுள் நடைபெற்றது. கடந்த இரண்டு ஆண்டுகளின் பின்னர் நேரடிக் கூட்டத்தொடராக அமைந்திருந்தமை சிறப்பம்சமாகும். 18 ம் திகதி மற்றும் 19ம் திகதி முற்பகல் குருமார் அவையும் 19 ம் திகதி நண்பகல் இணை அவையும் மாலை திருப்பேரவை பொது அவை தொடக்க நிகழ்வும் நடைபெற்று தொடர்ந்து 20 ம் 21 ம் திகதிகள் திருப்பேரவை கூட்டத்தொடர் நடைபெற்று 21 ம் திகதி திருப்பேரவை ஞாயிறு வழிபாட்டுடன் நிறைவடைந்தது.

**மறுமைக்குள் அழைக்கப்பட்ட அருள்பணியாளர்கள்**

இலங்கை மெதடிஸ்த திருச்சபையில் அருட்பணியாளராக நீண்டகாலம் திருப்பணியாற்றிய முன்னை நாள் மத்திய மறை மாவட்ட தலைவராகிய மூத்த திருப்பணியாளர் அருட்பணி.S.S.தம்பிராஜா அவர்கள் இவ்வருட ஆரம்பத்திலும் எமது திருச்சபையின் செயல் திறமை மிக்க இளம் திருப்பணியாளராகிய அருட்பணி.A.கிருபாகரன் அவர்கள் கடந்த யூலை மாதத்திலும் மறுமைக்குள் அழைக்கப்பட்டனர். இவர்களின் வாழ்வுக்கும் பணிக்கும் இறைவனுக்கு நன்றி செலுத்தி நினைவு பகிர்வும் இடம் பெற்றது இவ் நினைவுப்பகிர்வுடன் நாமும் இணைந்து கொள்ளுவதுடன் இவ் அருட்பணியாளர் களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்வதுடன் அவர்களின் ஆறுதலுக்காகவும் சமாதானத்திற்றாகவும் இறைவனை பிரார்திக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓய்வு நிலைக்குச் செல்லும் அருட்பணியாளர்கள்.**

அருட்பணி.A.R.மகேந்திரன் அருட்பணி.R.அன்பழகன் ஆகியோர் வருகின்ற வருடத்தில் ஓய்வு நிலைக்குச் செல்கின்றனர் இவர்களின் திருப்பணி வாழ்வின் நயப்புரை பகிரப்பட்டது இத் திருப்பணியாளர்களை வடக்கு கிழக்கு திருமாவட்ட அவையின் சார்பாக வாழ்த்துவதுடன் இவர்களின் ஓய்வு காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**திருப்பேரவை உபதலைவர்**

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் திருப்பேரவை 2022-2023 இற்கான உப தலைவராக மெதடிஸ்த தலமையக நிதி செயலாளர் திரு.நிசாந்த பொனாண்டோ அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். இவருக்கு எமது நல் வாழ்த்துகளை தெரிவிப்பதுடன் இறை ஆசிகளை வேண்டி நிற்கின்றோம்.

**திருப்பேரவை தெரிவுகள்**

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் திருப்பேரவை 2023-2024 இற்கான உப தலைவராக திருமதி.சாவித்திரி டீ சில்வா அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எமது திருச்சபையின் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவையின் 2024ம் ஆண்டிற்கான புதிய தலைவராக அருட்பணி.அ.சாம்சுபேந்திரன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் பொதுச் செயலாளராக அருள்பணி.சுஜித்தர சிவநாயகம் அவரகள் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்ற ஆளுனர் சபையினால் தெரிவு செய்யப்பட்டமையினை திருப்பேரவை ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்ற வரலாற்றில் அதன் முதல் முழுநேர பொதுச் செயலாளராக பணியாற்றிய அருள் கலாநிதி. D.T.நயிஸ்ல் அவர்களிற்குப் பின்னர் வடக்கு கிழக்கு திருமாவட்டத்தில் இருந்து தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் பொதுச் செயலாளராக நியமனம் பெற்றவர் இவர் என்பது சிறப்பம்சமாகும்.

இவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இவர்களின் பணி சிறக்க இறைவனைப் பிரார்த்தித்து மன்றாட்டுக்களை ஏறெடுக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் அருட்பணி. அரசரட்ணம் கிருபாகரனைப் பற்றிய நினைவு பகிர்வு

நண்பனின் உள்ளத்திலிருந்து

அருட்பணி. அரசரட்ணம் கிருபாகரன் கோமாரியை பிறப்பிடமாகக் கொண்டவர். 1982 ஆம் ஆண்டு திரு.திருமதி. அரசரட்ணம் அவர்களுக்கு கடைபிள்ளையாய் பிறந்தவர். பெற்றோருக்கும், உடன் பிறப்புக்களுக்கும் மிகவும் செல்லப் பிள்ளை. கோமாரி மெ.தடிஸ்த மிஷன் பாடசாலையிலேயே தனது கல்வியை தொடர்ந்து நிறைவு செய்தார். ஆண்டவரின் அழைப்பை 2002 ஆம் ஆண்டு ஏற்று தன்னை முழுவதுமாக குருத்துவ பணிக்காய் அர்ப்பணம் செய்தார்.

2006 ஆம் ஆண்டு முதல்முதலாய் நண்பன் கிருபாவை சந்தித்தேன். சிரித்த முகத்துடன் என்னுடன் தன்னுடைய அறிமுகத் தினை ஏற்படுத்தினார். அன்றிலிருந்து இலங்கை இறையியல் கல்லூரி முடியும் நாட்கள் வரை ஒன்றாக உண்டு, பழகி, படித்து மகிழ்ந்திருந் தோம் (2007-2011). கிருபாவை குறித்து கூறப் போனால் அதிகம் கூற முடியும். அதிலே எனக்கு பிடித்த சில பக்கங்களை பகிர்கிறேன்.

**எளிமையான வாழ்க்கை முறை** (Simple Life)

எங்காவது பிரயாணப்படுவதாயின் ஒரு சிறிய பயணப்பை தான் கிருபாவின் கையில் இருக்கும். குறைந்த அளவு உடுப்புகளைத்தான் அந்த பையினுள் வைத்திருப்பார். மிகவும் நேர்த்தியாய் அதை மடித்து கசங்காமல் அதை போட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார். Life Boy Soap தான் எப்பவும் பாவிப்பது வளமை. அழகு சாதன பொருட்கள் எதுவும் பாவிப்பதில்லை. அவரது Lifestyle மிகவும் எளிமையானது. அவரது அறைக்குள் சென்றாலும் ஆடம்பரமான எந்தப் பொருட்களையும் காண முடியாது.

**பதட்டமில்லாத வாழ்க்கை முறை** (A Stress-free Lifestyle)

எதற்கும் அவசரப்பட்டு பதறி அடித்துத் திரிவதை நான் அவரிடம் காணவில்லை. எதையும் சாதாரணமாக எடுத்துக் கொள்வார். கல்லூரியின் எந்த செயற்பாடாக இருந்தாலும் பதட்டமில்லாமல் செய்து முடிப்பார். பல நேரங்களில் எமது Assignment வேலைகளை குறித்த நேரத்தில், குறித்த திகதியில் செய்து முடித்து கொடுக்க வேண்டும் என்று நாம் அவசரப்பட்டுத் தெரியும் போது, அவர் அவசரமோ, பதட்டமோ இல்லாமல், இரவு இரவாக இருந்து யாருடைய உதவியும் இல்லாமல் தானே type செய்துகுறித்த நேரத்திற்குள் சமர்ப்பித்ததை பார்த்து வியந்திருக்கிறோம்.

**தனித்துவமானவர்** (Uniqueness)

அவருக்கென்று சில தனித்துவம். நடைஉடையில், பேச்சிலும், தலைமைத் துவத்திலும் ஆன்மீகத்திலும், மற்றவர்களோடு பழகுவதிலும் தனக்கென்று ஒரு தனித்துவத்தினைக் கண்டேன். பசி வந்தால் எங்களை கூப்பிட்டுப் பார்ப்பார், "என்ன கடைக்கு வர்ரீகளோ!" என்று கூப்பிடுவார். நாங்கள் தாமதமானால் அல்லது வேலையாக இருந்தால், தான் தனியாகவே சென்று சாப்பிட்டுவிட்டு வந்து சேர்வார். ஒன்றாக இருந்தாலும் தன் தனித்துவத்தை வெளிப்படுத்த வேண்டிய இடங்களில் அதை சரியாய் வெளிப்படுத்தினார்.

ஒரு நாள் கல்லூரியில் நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்குமிடையில் முரன்நிலை ஏற்பட்டு அதன் விளைவாக அசாதாரண நிலமை ஏற்பட்டது. அப்போது 'மெதடிஸ்த மாணவர்களுக்கு' தலைவராய் கிருபா தான் இருந்தார். உடனடியாக திருச்சபை தலைவரோடு தொடர்பு கொண்டுவிட்டு எங்களிடம் வந்து சொன்னார், "உடனடியாக மெதடிஸ்த மாணவர்களை அறைக்குள் போய் இருக்கவாம், இல்லாவிட்டால் Bag கை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு போகவாம்" என குரலை உயர்த்திக் கூறியது இப்பவும் ஞாபகமாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திறமையானவர்** (Talented Person)

பாடும் திறமை, நடிக்கும் திறமை, மொழிகளில் விரைவாக தேர்ச்சியடையும் திறமை, வழிபாடுகளை நேர்த்தியாக செய்தல் போன்ற பல திறமைகளை தனக்குள் வைத்திருந்தார். பிற்காலத்தில் திருப்பணித்தளங்களில் அதை நிறைவாய் பயன்படுத்தியதைக் கண்டோம். கிருபா, தன்னுடைய திறமைகளை வைத்து ஒரு நாளும் தன்னை பெருமை பாராட்டியதில்லை.

அதே போல நகைச்சுவை ததும்ப நண்பர்களோடு பேசுவார். நாங்கள் இறுதி ஆண்டு மாணவர்களாய் இருந்த போது, நண்பர்களில் அறைக்குள் சென்று செபக்கூட்டம் வைப்போம். ஒரு நாள் முதலாம் ஆண்டு மாணவர் ஒருவரை அழைத்து மத்தேயு முதலாம் அதிகாரத்தில் இருந்து பிரசங்கம் ஒன்று செய் என கிருபா கூறியதை மறக்கவே முடியாது.


திருப்பணிக்காலம் குறுகியதாய் இருந்தாலும் 40 வயது வந்த போது குடும்பத்திற்கு செய்ய வேண்டிய கடமைகள், தான் பணியாற்றிய இடங்களில் திருச்சபைகளுக்கும், சமூகத்திற்கும் ஆற்றிய பணிகள் அது நிறைவானதே. இறுதியாக 2021 ஒக்டோபர் மாதம் புத்தூர் திருச்சபையின் 175வது ஆண்டு விழாவில் பிரதம அருளுரையாளராக கிருபாவை அழைத்து திருமுழுக்கு, திடப்படுத்தல் வழிபாடுகளை சிறப்பாக நடாத்துவதற்கும் இறைவன் இறுதி வாய்ப்பை எங்களுக்கு தந்தார்.

நண்பா, சென்று வா!
இத்தரணி உன்னை போற்றுகிறது!
உன் பணி வழி நாமும் தொடர்கிறோம்.
ஒன்றாய் நாம் கற்றாலும்,
இலக்கை அடைய எமக்கு முன் நீ சென்றுவிட்டாய்!
உன் களங்கமில்லா உள்ளம், எம்மை கலங்க வைத்தது!
பகட்டில்லா உன் ஆன்மீகம், பலரை பண்படுத்தியது!
புகழ் தேடா தரணி வாழ்வு, உன்னில் புதுமை காண்கிறது!
துணிந்து செல் நண்பா! புகலிடம் நிச்சயம் உனக்குண்டு!
அக்கரையில் நாம் சந்திக்கும் வரை விரைகின்றோம் நண்பர்களாய்..!

**உன் நண்பன். சசி**
(அருட்பணி. T.R. சசிகரன்,
பொறுப்புக்குரு புத்தூர் மிஷன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவ ஊழியர்கள் யார்?

1. ஊழியர்கள் தேவனால் அழைக்கபட்டவர்கள்:
   (எபி. 5:4. மத் 5.19)

2. ஊழியர்கள் உங்களது தாய் போன்றவர்கள்:
   (1தெச. 1:7)

3. ஊழியர்கள் உங்களது தகப்பன் போன்றவர்கள்:
   (1கொரி. 4:15)

4. ஊழியர்கள் தேவதூதர் போன்றவர்கள்:
   (கலா. 4:14)

5. ஊழியர்கள் கிறிஸ்துவைப் போன்றவர்கள்:
   (கலா. 4:14)

6. ஊழியர்கள் அக்கினி ஜீவாலையைப் போன்றவர்கள்:
   (சங். 103:4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஊழியர்கள் கனத்திற்குரியவர்கள்:

(1தீமோ. 5:17) (எபிரே. 5:4)

8. ஊழியர்கள் உங்கள் பங்காளிகள்:

(பிலி. ளு1:7)

9. ஊழியர்கள் உங்கள் சகாயர்கள்:

(11கொரி. 1:24)

10. ஊழியர்கள் உங்களுக்காகத் திறப்பில் நிற்பவர்கள்:

(எபி. 13:17) (யாத். 32:32) (1தீமோ. 2:1)

11. ஊழியர்களிடம் விசுவாசிகள் (சபையார்) அன்பாயிருக்க வேண்டும்:

(1தெச. 5:13)

12. ஊழியர்கள் எச்சரித்துப் புத்தி சொல்லுபவர்கள்:

(தீத்து 2:5.6) (அப்.5:3.4) (தீமோ. 5:20)

13. ஊழியர்கள் எல்லாவற்றிலும் நற்கிரியைகளுக்கு மாதிரியாக உங்கள் முன்னிலையில் நடப்பவர்கள்

(தீத்து. 2:7)

14. தேவன் தமது ஊழியக்காரருக்கு தமது இரகசியத்தை அறிவிக்கின்றார்:

(ஆமோஸ்: 3:7)

15. ஊழியர்கள் உங்களுக்கு முன்மாதிரிகள்:

(எபி. 13:17) (1தீமோ. 4:12)

**திரு. M. எசேக்கியல்**
உள்ளூர் அருளுரைஞர்
பருத்தித்துறை கட்டைவேலி - சேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட் திரு. யோன். பிலிப். சண்முகம்

**(Rev. John. Philip. Sanmugam)**



அருட்திரு.யோன்.பிலிப். சண்முகம் 1799ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தார். 1814ம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு முதன்முதலாக வெஸ்லியன் மிஷனரிமார்களான அருட்திரு.தோமஸ்.ஸ்குவான்ஸ் மற்றும் அருட்திரு. ஜேம்ஸ், லிஞ்ச் வந்தடைந்தபோது, 14 வயதுடைய இந்து சமயத்தவரான யோன்.பிலிப். சண்முகம் மிஷனரிமாரின் பிரசங்கங்களை கேட்டு மனமாற்ற டைந்து, கிறிஸ்தவனாகி மெதடிஸ்த திருச்சபையில் திருமுழுக்கும் பெற்றார். அருட்திரு.தோமஸ்.ஸ்குவான்ஸ் அவர்களின் பிரசங்கங்களினால் கவரப்பட்ட யோன்.பிலிப்.சண்முகம் தானும் ஒரு ஆங்கில பிரசங்கியாக வர விரும்பினார். பல வருட பயிற்சியின் பின்னர் யோன்.பிலிப்.சண்முகம் குருத்துவப் பணிக்கான தகுதியைப்பெற்று, 1815ம் ஆண்டு அன்றைய வட இலங்கை திரு.மாவட்ட அவைத் தலைவர் அருட்திரு.றொபட். ஹாபர் அவர்களினால் திருப்பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

1829ம் ஆண்டு அன்றைய வட இலங்கை திருமாவட்ட அவைத்தலைவர் அருட்திரு. யோசப்.றொபேட் அவர்களினால், யோன்.பிலிப். சண்முகம் மற்றும் யோன்.பிலிப். சண்முகத்தை விட 2 வருடங்கள் பின் திருப்பணியில் இணைந்து கொண்ட சாலோமோன்.வேலுப்பிள்ளை ஆகியோர் தி;ருப்பணியாளர்களாக அருட்பொழிவு பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்திரு.யோன்.பிலிப்.சண்முகம் யாழ்ப்பாணத்தில் (1825-1826) கட்டை வேலியில் (1827-1830) பின்னர் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பருத்தித்துறை (1835) கல்முனையிலும் அதன் பின்னர் கட்டைவேலியில் (1845-1849) பின் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் என்ற ஒழுங்கு முறையில் திருப்பணியாற்றினார்.

பருத்தித்துறை திருச்சபையில், 1835ம் ஆண்டு அருட்திரு.யோன். பிலிப். சண்முகம் அவர்கள் பணியாற்றிய போது அவரின் திருப்பணி பின்வருமாறு அமைந்திருந்ததாக குறிப்பிடப்படுகிறது.

திங்கள், செவ்வாய் கிழமைகளில் வீடு சந்திப்பும், துண்டுப்பிரசுர விநியோகமும் புதன்கிழைம மாலை 7 மணிக்கு ஜெபக்கூட்டமும் வியாழக்கிழமை பருத்தித்துறையில் மாலை 4 மணிக்கு துண்டுப்பிரசுரமும் காட்சிப்படுத்தலும், வெள்ளிக்கிழமை மாலை 7மணிக்கு புலோலி அல்லது தம்பசிட்டியில் பிரசங்கத்தில், சனிக்கிழமைகளில் திருச்சபை மக்களைச்சந்தித்து, மக்களை ஞாயிறு ஆராதனைக்கு ஆலயத்திற்கு வருமாறு அழைத்தல், ஞாயிறு காலை 10 மணி ஆராதனையில் பிரசங்கத்தில் இவ் ஞாயிறு ஆராதனைக்க பருத்தித்துறையிலிருந்து 3மைல் மற்றும் 6மைல் வந்து வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் 1866-1882 வரை திருப்பணியாற்றிய மிஷனரியான அருட்திரு.யோன்.மில்ரன்.பிரவுய் (Rev.John.Milton Brown)அவர்கள் அருட்திரு. யோன்.பிலிப். சண்முகம் அவர்களைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். அருட்திரு.யோன்.பிலிப். சண்முகம் தான் திருப்பணியாற்றிய எல்லா திருச்சபைகளிலும், திருச்சபைமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைமக்களின் நம்பிக்கையை வென்ற திருப்பணியாளராக விளங்கினார். பல இன்னல்களின் மத்தியிலும் 1843-1847 வரை திருப்பணியாற்றிய ஒரே தமிழ்க் குருவானவராக அருட்திரு.யோன்.பிலிப். சண்முகம் விளங்கினார்.

அருட்திரு.யோன்.பிலிப்.சண்முகம் தனது 40வருட கால திருப்பணி வாழ்வின் பின்னர் 1864ல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அருட்திரு.யோன்.பிலிப். சண்முகத்தின் மகள் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியையாக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**- திரு.டினேஸ் குணரெட்ணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறுக்கெழுத்து போட்டி

## இடமிருந்து வலம் / வலமிருந்து இடம்

01. இறைவனோடு போராடுகிறவன் என்ற பொருள் கொண்டது.
02. கண்காணித்தல் எனும் பொருள் குறிக்கும் சொல்.
03. ஆதாமா எனும் சொல்லின் அர்த்தம்
04. யாக்கோபு கடவுளை நேரில் கண்ட இடத்திற்கு வைக்கப்பட்ட பெயர்.
05. ஆண்டவர் ஆபிரகாமுக்கு தேவதாருவின் அருகே தோன்றிய இடம். (குழம்பியுள்ளது)
06. யாக்கோபு கனவு கண்ட இடம்.
08. நீ ஒரு சிங்கக்குட்டி எனக் கூறப்பட்டவன். (திரும்பியுள்ளது)
09. பார்வோனின் மெய் காப்பாளர்.
10. எபிரேயத்தில் கருஞ்சிவப்பு எனும் கருத்தைக் கொண்டது.
11. ஈசாக்கை பலியிட ஆண்டவர் போகுமாறு கூறிய நிலப்பகுதி. (திரும்பியுள்ளது
13. என்னைக் காண்கின்றவர் வாழ்கின்ற கிணறு. (முதல் 3 எழுத்தும் கெட்டு குழம்பியுள்ளது)
14. மனித குலத்தின் தாய்.
17. நிம்ரோது ஆசீரியாவில் அமைத்த நகரங்களில் ஒன்று.
18. நானோ கிழவி என் தலைவரோ வயது முதிர்ந்தவர் என தனக்குள் நகைத்தவள். (திரும்பியுள்ளது)
19. இவர்களுடைய வாள் வன்முறையின் கருவிகள். (திரும்பியுள்ளது)
20. இசக்கார் என்பதன் பொருள்.

## மேலிருந்து கீழ் / கீழிருந்து மேல்

01. தன் தந்தையுடன் ஒரே நாளில் விருத்தசேதனம் செய்யப்பட்டவர்.
04. கருப்பையை கிழித்துக் கொண்டு வந்தவர்.
07. மனித செருக்கின் மூலம் கட்டப்பட்டது.
08. ஏரின் மனைவின் பெயர்.
09. ரெபேக்காவின் பணிப்பெண். (குழம்பியுள்ளது)
11. ஆபிரகாம் தன் மகனை பலியிட தயார் செய்த இடத்திற்கு இட்ட பெயர். (குழம்பியுள்ளது)
12. சாராளின் அடிமைப் பெண்.
13. கற்குவியலுக்கு எகர்சகதுத்தா எனப் பெயரிட்டவர்.
14. காயீனின் மகன்
15. வாழ்வின் மரத்தை பாதுகாக்க அதனை சுற்றி வைக்கப்பட்டவைகளின் ஒன்று. (திரும்பியுள்ளது)
16. நோவாவின் பேரர்களில் ஒருவர்.
17. உலகின் முதலில் பேராற்றல் கொண்டவன்.
18. ஆண்டவரால் அழிக்கப்பட்ட நகரங்களில் ஒன்று – (திரும்பியுள்ளது)
19. இறைவன் நோவாவுடன் செய்த உடன்படிக்கையின் அடையாளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | | | | | ■ | 20 | | ■ |
| 2 | | | ■ | ■ | 19 | | ■ | | 18 |
| ■ | 3 | | ■ | ■ | ■ | ■ | 11 | | |
| | | | 4 | ■ | 17 | | | ■ | |
| | | ■ | | 5 | | ■ | | 12 | ■ |
| 7 | ■ | ■ | | ■ | | | | | 13 |
| ■ | ■ | 6 | | ■ | | | ■ | | |
| 8 | | ■ | ■ | | ■ | 16 | | ■ | |
| | ■ | ■ | 10 | | | ■ | | 15 | ■ |
| | | | | 9 | ■ | ■ | 14 | | |

**தொகுப்பு**: **செல்வி. யதுர்சிகா சிவகுமார்**, கல்முனை

## சென்ற இதழின் குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றோர்

**திருமதி. T. நேசராஜா (ஜோதி வாசகர், கோட்டக்கல்லாறு)**

**திருமதி S. ட்டலி சுகுமார் (திருஞானசம்மந்தர் வீதி, திருக்கோவில்)**

**போட்டிக்கான நிறைவுத் திகதி : 30-01-2023**

மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் உங்கள் விடைகளை அனுப்பவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**ஆசிரியர்,**

**தொடுவானம், காந்திகிராமம் மெதடிஸ்த தேவாலய வீதி, சின்ன ஊறணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்கள் அனைவருக்கும்

# தொடுவானம்

## சஞ்சிகையின்

## கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

**இலங்கை மெதடிஸ்த திருச்சபை**
வடக்கு கிழக்கு திருமாவட்ட அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Design & Print : Wanasinghe Printers, Batticaloa. 065-2227170